ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**April - June 2009**

விரோதி சித்திரை - ஆனி 2009

இலவச வெளியீடு

3000 பிரதிகள்



சுவாமி பரமஹம்ச நித்தியானந்தர்
மீண்டும் கனடா வருகிறார்

புதிய இடத்தில் இரா சுப்பர் மார்க்கற்றுக்கு மேல்

# V. K. JEGAN INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் **Photo,** திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் **Fram** செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

**2607 Eglinton Ave. E., Unit 1**
**Scarborough, ON**


# Non-Medical Insurance

**வைத்திய பரிசோதனையற்ற**
**ஆயுட் காப்புறுதியை**
**பெற்றுக் கொள்ள அழையுங்கள்**



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
**www.familyprotection.ca**



உ

சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 10: இதழ் 1
விரோதி வருடம்
சித்திரை - ஆனி
திருவள்ளுவர்
ஆண்டு -2040
ஆங்கில ஆண்டு 2009

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. இயற்கையோடு இயைந்த வாழ்வு
4. தக்ஷிண கைலாச புராணம்
5. சிவம் விளக்கவுரை
6. ஆத்மஜோதி வாசகர்களுக்கு
7. திருவீழிமிழலை
8. சைவர்களின் சமயக்கொடி
9. சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்
10. சிவதீட்சை
11. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
12. கைதடியில் தரிசித்த மார்க்கண்டு சுவாமிகள்
13. கள்ளுண்ணல்
14. திருமுறைகளின் தாற்பரியம்
15. விசாலாட்சி அம்மையார் (மாதாஜி) வரலாறு
16. தாவரங்கள் விலங்குகளுக்கும் கர்மா உண்டா?
17 ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

# தருமம் செய்வோம்

எமது சமயத்துக்கு மற்றொரு பெயர் தருமம். அதனால் இந்து சமயம் இந்து தருமம் என்றும் வழங்கப்பெறும்.

சிவபெருமானைத் தாங்கும் இடபமும் வேறு யாருமல்ல - தரும தேவதைதான். எப்பொழுதும் சிவபெருமான் தருமதேவதை யிலேதான் எழுந்தருள்வார். அவர் திருவிளையாடல்கள் செய்வதும் தருமத்தை நிலைநாட்டவேயாம்.

தருமம் வடமொழி. அறம் தமிழ்ச்சொல்.

'அறஞ்செய விரும்பு' என்றார் அவ்வைப்பிராட்டியார். அறஞ் செய் என்று அவர் கட்டளையிடவில்லை. விரும்பு என்றுதான் சொன்னார். ஏனென்றால் அறஞ் செய்யும்படி எவரையும் கட்டியடித்தல் தருமமாகாது.

விரும்பு என்று அவர் கூறியதற்குள் மற்றுமொரு பொருள் பொதிந்திருக்கின்றது. அறம் தொடங்குமிடம் மனம். அதனைச் செய்ய மனந் தானாக விரும்புதல் வேண்டும். அதனால் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்றார் வள்ளுவர் பெருமானும்.

அறத்தை நல்ல மனத்துடன் செய்தல் வேண்டும். அதாவது, அழுக்கில்லாத குற்றமில்லாத மனத்துடன் செய்தல் வேண்டும். பெயருக்காக, புகழுக்காக, போட்டிக்காக, நிர்ப்பந்தத்துக்காகச் செய்யப்படும் உதவிகள் அறத்தின்பாற்படா.

அடுத்துக் கவனிக்க வேண்டியது யாருக்கு எங்கு எப்பொழுது அறஞ் செய்யவேண்டும் என்பது.

அறம் யாருக்காக?

அது தேவைப்படுபவருக்காக! இது மிகவும் முக்கியம்.

அறஞ் செய்வது மனித குலநன்மைக்காக, உலகத்தின் உயர்வுக்காக என்றும் சொல்லப் படுவதுண்டு. அது ஒருவகை. அந்தரப்படுபவருக்கென்று செய்யப்படுவது இன்னொருவகை. பொதுப்பணிகளைக் காலதாமதஞ் செய்தாலும் அந்தரப்படுபவருக்குச் செய்ய வேண்டிய உதவிகளை உடனடியாகச் செய்வதே உயர்ந்த அறம்.

தாயகத்தில் வன்னிப்பகுதியில் மக்கள் படும் அவலங்கள் சொல்லில் அடங்கா. அந்தரப்படுபவருக்கு உதவி செய்து அவர்களை வாழவைப்பதுதான் உண்மையான தருமம். சிவதருமம்.

எமது சமயவாழ்வுக்குத் தக்க பலன் கிடைக்க வேண்டு மாயின் இன்றே - இப்பொழுதே நல்ல மனத்துடன் அறஞ் செய்வோமாக!

- வி. கந்தவனம்
ஆசிரியர்

# எங்குமுள்ள பிள்ளையார்

வி. கந்தவனம்

## வல்வெட்டித்துறை – வைகுந்தப் பிள்ளையார்

எல்லையிலா அண்டவெளிக் கெல்லை யானார்
ஏகநா தன்சிவனின் பிள்ளை யானார்
வல்லசுரர் தொல்லைகளை வாட்டி வென்றார்
வானவருக் கானவழி காட்டி நின்றார்
கல்விகலை வாணர்வதி மாட வீதிக்
கடற்கரையில் தேவர்களும் காற்று வாங்கும்
வல்வைவளர் வைகுந்தப் பிள்ளை யாரை
வணங்கிவரின் வல்லவராய் வாழ லாமே. (72)

## வல்வெட்டித்துறை
## திருச்சிற்றம்பலப் பிள்ளையார்

அருச்சித்தே யமரர்சிவ னருளை வேண்ட
ஆதியிலார் ஆனைமுகப் பிள்ளை யானார்
கருஞ்சிந்தைக் கயமுகனைக் கடிந்து நின்றார்
கலங்கியவா னவர்க்கெல்லாம் கதிய ளித்தார்
பொருட்சொத்தை யருட்சொத்தாய்ப் புதுக்க வல்ல
புண்ணியத்தார் பொற்பதியாம் வல்வை போற்றும்
திருச்சிற்றம் பலப்பிள்ளை யார்தாள் சேர்வார்
செல்கின்ற திசையெங்குஞ் சிறப்பார் தாமே. (73)

## வல்வெட்டித்துறை – உலகுடைய பிள்ளையார்

அலகிலரும் பொருளானார் அமுத மானார்
ஆதியந்த மில்லாத அதிப ரானார்
கலகமிடும் மனத்தவரின் கதிய தானார்
கணமேயும் மறவாதார் மதியு மானார்
பலகலையும் பைந்தமிழும் பாங்கில் ஓங்கும்
பண்புமிகு வல்வையரின் பதியில் மேவி
உலகுடைய பிள்ளையராய் ஒளிரு கின்றார்
உருகியவர் பாதமலர் பரவு வாமே. (74)

வல்வெட்டித்துறை
புஸ்கரணிப் பிள்ளையார்

பாகமுறு சிவசத்தி பால னானார்
பாசவினை பாவவினைக் கால னானார்
தோகைமயில் தம்பிக்குத் தூய வள்ளி
துணையாகத் தும்பிக்கைத் துணையு மானார்
காகமென வந்துமுனி கமண்ட லத்தை
கவிழ்த்தருளி இந்திரனின் கவலை தீர்த்தார்
போகநல வல்வைநகர் பொலிந்தி லங்கும்
புஸ்கரணிப் பிள்ளையரைப் போற்று வாமே. (75)


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# இயற்கையோடு இயைந்த வாழ்வு
# இறையோடு இணைந்த இன்பம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

வாழ்க்கையொரு பிரயாணம். சிலருக்கு, சில உயிருக்குக் குறுகிய காலம். சிலவற்றுக்கு நெடுங்காலம். இன்று மனிதத்தின் சராசரி இறப்பு வயது கூடிவருகிறது. விஞ்ஞானம் அந்த அளவுக்கு மேலோங்கியுள்ளது. எனினும் மரணத்தை நிறுத்தவோ உயிரை ஆக்கவோ கண்டுபிடித்ததாய் இல்லை. உலகம் அவல ஓலங்களால் நிறைந்து வழிகின்றது. இதில் இருந்து மீளவும் வழியில்லை, இயற்கையின் சீற்றமும் வெந்த புண்ணில் வேலேறிய மாதிரித்தான்.

உலகிற் தோன்றிய எல்லாவகை உயிர்களும் இயற்கையோடொட்டி வாழ்கின்றன, வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எறும்பு முதல் யானை ஈறாக, மீனில் இருந்து திமிங்கிலம்வரை, சிட்டில் இருந்து தீக்கோழி வரை எல்லா உயிரினங்களும் இயற்கையை ஒட்டித்தமக்கோர் வாழ்வமைதியை மேற்கொள்கின்றன. இவற்றின் மத்தியில் மனிதகுலம் தனக்கு வாய்த்த, அறிவியலை, அடிப்படையாக்கி, இயற்கையைத் தனக்கு அனுகூலமாய் அமைத்து ஒரு புனித வாழ்வை மேற்கொள்கின்றது. எல்லா உயிர்களுக்கும் பிறப்பும் இறப்பும் இரு எல்லைகள். இவற்றிடையே பிணி, பசி, மூப்புத் துன்பம் போன்ற நெருக்கடிகளும் இயற்கை உபாதிகளும் இல்லாமலும் இல்லை. ஆண் பெண் உறவு எனும் இணைவிழைச்சு இன்றி உலகமே இல்லை. பசி தாகம் யாவர்க்கும் பொது.

எனினும் மனித வாழ்க்கை வித்தியாசமான கண்ணோட்டம் உடையது. இப் பார்வையில் மனிதகுலம் பல போராட்டங்களின் மத்தியிற் தன்னை வழிநடத்துகிறது. வெற்றியும் தோல்வியும் நமது கையில் இல்லை. இப்படித்தான் வாழவேண்டுமென்ற வேலி போட்டுப் பிறரால் ஏளனப்படுத்தாத செவ்விய வாழ்வமைதியை முன்னெடுப்பதே முக்கியம். எப்படியும் வாழலாமென்ற சுலோகம் வாழக்கையைப் பாழடித்துவிடும். எனவே மனப் பக்குவத்துடன் பிறரும் வாழ நாம் வாழ்வதே வாழ்க்கை நெறியாகும். வாழ்க்கையொரு கலை, வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்ந்து காட்டுவதே வாழ்வு. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை. வாழ்க்கையொரு பண்பாட்டுக் கோலம். வாழ்ந்து பிறரும் வாழவாழ்வது வாழ்வு என விமர்சனம்

செய்யப்படினும் ஒவ்வொருவரும் தாமே இயங்கி வாழவேண்டிய நியதிக்குட்பட்டது. வாழ்க்கை புனிதமான, இனிதமான மன நிறைவுடன் வாழ்வது நிறைவை, நிம்மதியைத் தரலாம். செம்மையான வாழ்வியலில் நாம் வைக்கும் ஒவ்வொரு அடியும் நிதானமாய் எடுத்து வைக்கப்பட்டால் வெற்றி நிட்சயம். வெற்றியென்றே தோற்றுவிட்டு நோகின்ற நெஞ்சோடு உலகை நோக்கியுழல்வோரும் இல்லாமல் இல்லை.

இயற்கையைத் தன் தேவைக்கு மாற்றுவதும், தான் மாறுவதும் கல்வியின் இருநிலை. எனவே மனிதப் புனிதம் பேணப்படல் முக்கியம். மனநிம்மதி, மனநிறைவு மன அமைதி, சாந்தி நிலவ வேண்டும். மனித நேயம் மனித விழுமியங்கள் பேணப்படல் இன்றைய கருதுகோள்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் மனித சமுதாயத்தின் முக்கியமான உறுப்பினர்கள். கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எழுதாச்சட்டங்கள். அவ்வண்ணமே. அறமும் நீதியும் நேர்மை, நறுக்கு, நாணயம் மரியாதை, நிதானம், நாகரிகம். கண்ணோட்டம் ஒப்புரவு போல்வன சமுதாயத்தின் பொறுப்பான அம்சங்கள். எம் எடுகோள்கள் ஞானதீட்சண்யமாம். தொலைநோக்குடையனவாய் சீரும்சிறப்பும் தரக்கூடியவையாய் அமைதலே நிதானமான வாழ்க்கைக்கு வழிசமைக்கும்.

வாழ்க்கையென்பது வியாபாரம். ஜனனம் என்பது வரவாகும். மரணம் என்பது செலவாகும் என கண்ணதாசன் கவி செய்தார். ஷெரீப் அவர்கள் வாழ்விற் துன்பம் வரவு சுகம் செலவு இருப்பது கனவு என்றார். பாபா வாழ்க்கையென்பது ஒரு நாட் சந்தைக் கூட்டம் என்றார்.

எல்லாவற்றையும் நின்று நிதானித்துச் சிந்தித்து மேற்கொள்வதே வாழ்வியற் தர்மம். இந்த உயிருக்கும் ஓர் வாழ்வுண்டு என்பதை மனதிற் கொண்டாற் சிறப்பாம். உண்டு உடுத்து, தூங்கி விழித்து படாடோபமாய் வாழ்வதும் பிள்ளைகள் பெறுவதும் தான் வாழ்க்கையன்று. வாழ்க்கை நீரோட்டம் செவ்விதாய் அமைய நாம் ஒவ்வொருவரும் அயராது உழைக்க வேண்டும். அவ்வுழைப்பின் ஊதியமே வாழ்க்கை. உயர்ந்த வாழ்க்கையே இயற்கையின் நியதி. ஒவ்வொருவர்க்கும் உலகியல் வாழ்வையும் கடந்து ஆத்ம விடுதலைக்கான உயிரியல் வாழ்வும் வேண்டும். ஒன்று ஆன்ம ஈடேற்றம். மற்றது அதன் அடித்தளம். எனவே புண்ணியம் ஆம் பாவம் போம் என்றார் அவ்வை. புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் தவிர்க்கப்பட வேண்டியது. இதை இன்னோர் வாய்பாட்டிற் கூறின் நீதி வழுவா நெறியில் எம்மை

இட்டுச் செலுத்த வேண்டும். இவரே உயர்ந்தவர். நீதி தெரிந்தவர் என்கிறார் தமிழ் மூதாட்டி.

வாழ்க்கை என்பது தூய்மையற்ற நிலையில் இருந்து தூய்மைக்கும், வெறுப்பில் இருந்து பரந்த அன்பிற்கும், மரணத்தில் இருந்து அமரநிலைக்கும், குறைவில் இருந்து நிறைவிற்கும், அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைக்கும், வேற்றுமையில் இருந்து ஒற்றுமைக்கும் அறியாமையில் இருந்து நிரந்தரமான பேரின்பத்திற்கும், பலவீனத்தில் இருந்து அளவுகடந்த ஆற்றலுக்கும் அழைத்துச் செல்கிறது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது திருவள்ளுவர் வாக்கு. இதற்கு விளக்கம் தந்த ஆய்வாளர் இப்படி எழுதியுள்ளார்.

எத்தகைய வாழ்க்கையில் தனக்கும் பிறருக்கும் மிகுதியான பயன் உண்டாகிறதோ அத்தகைய வாழ்க்கையே வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கை. (குறள்வழிவாழ்வு வ. இராசையா.)

இதன் சுருக்கம் பிறர்க்கென வாழ்வதே வாழ்க்கையாம். இதையே இளம்பெரு வழுதி "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையான உண்டில் உலகு" என்றார். விவேகானந்தர் "சுயநலம் பின்னுக்கும் பிறர்நலம் முன்னுக்கும் அமைய வேண்டும்" எனக் கூறினார். வாழு வாழவிடு என்ற கோட்பாடும் இந்த அடிப்படையில் வந்ததே. பிறர் உண்டபின் உண், பிறர் உடுத்த பின் உடு என்று நவீன கவி பேசும்.

எவர் எப்படிப் பேசினும் வாழ்பவர்கள் நாம் பிறரையும் வாழவைத்து நாமும் வாழ வேண்டும். பிறரை நேசிக்க வேண்டும். அயலட்டையைப் பற்றி யோசிக்கவும் வேண்டும். பிறர் துன்பம் கண்டு பொறாராய் உதவும் (சஹ்ருதயம்) சம உள்ளம் எல்லோர்க்கும் வேண்டும். பேசும் அளவுக்குச் சாதனையும் வேண்டும். சொல் வேறு செயல் வேறுபட்டார் தொடர்பு கனவிலும் இன்னாதென்பது குறள் மொழி.

எனவே அந்தரங்க சுத்தியோடு நாம் வாழ வேண்டும். வெளிச் சுத்தம் எவ்வளவு இன்றியமையாததோ அகச்சுத்தமும் தேவை அகப்பகையும் புறப்பகையும் நீக்கப்படல் வேண்டும்.

காமம்: (பொருள்கள் பிள்ளைகளில் அதீதபற்று), குரோதம் (பகைமை, ஒருவருக்குக் கொடுமை செய்ய விழைதல்) லோபம் (ஈயாமை), மதம் (தற்பெருமை), மோகம் (மயக்கம்), மாற்சரியம் (பெருமை), என்பவற்றை நீக்கி அன்பு, தயை, பரோபகாரம், நட்பு பொறுமை போன்றவற்றை விளைவு செய்தால் நிகர அறுவடை கிட்டும். அன்பே உயரிய ஆயுதம். பகைமை, கொடுமை போன்ற

இம்சைகள் நீங்கி எல்லா சீவராசிகளிலும் நேயம் நிறைந்தவர்களாய் மனிதம் சிறக்க வேண்டும். பிறர் போற்ற வாழ்தல் நன்று பிறர் தூற்ற வாழக்கூடாது. சகோதரத்துவம், உடனுறைதல், நட்பு, பொறுமை போன்ற உயர்ந்த பக்குவங்களைப் பரம்பரை பரம்பரையாக வளர்த்து அடுத்த சந்ததியினர் சிறந்த பிரசைகளாக வாழ நாம் வாழ்ந்து அவர்களையும் வாழ ஆற்றப்படுத்த வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் மந்திரம் நல்ல தாரகமாம். சண்டை சச்சரவுகள் இன்றி நாம் வாழ முயல்தல் நம் கடமையும் பிறவியின் நோக்கமும் சுதந்திரமுமாம்.

சைவசமயிகளாகிய நாம் சைவ ஆசாரசீலராய் வாழ வேண்டும். தாமச உணவுகளைத்தவிர்த்து சாத்வீக உணவான ஆரத உணவுகளை உண்ணல் வேண்டும். சமவேளையில் மேற்குலக மக்கள் தாவரபோசனம் செய்கின்றனர். அதன் தன்மை, நலம் சத்து அறிந்து எனவே தான் எம்முன்னோர் சத்து நிறைந்த தாவர உணவை உண்டனர். கீரைவகை, பொன்னாங்காணி, வல்லாரை, அகத்தி தவசிமுருங்கை இலை, சண், பொன்னாவரசு, முசுட்டை, குறிஞ்சா, கறிமுருங்கையிலை, தூதுவளை போன்றவற்றுடன் பால் தயிர் மோர் என்பவற்றையும் பாவித்தனர். இதனாலே உடல் நலமும், நோய்களினின்றும் விடுதலையும் கிட்டியது. ஆசாரம் சுத்தம், துப்புரவு பேணினர் வீடுவாசல் உடை, பாத்திரம் எல்லாவற்றிலும் புனிதமாய் இருந்தனர். தொடர்ச்சி 15ஆம் பக்கம் பார்க்க



பதினெண்புராணங்களுளொன்றாகிய காந்தத்திலுள்ள

# தக்ஷிண கைலாச புராணம்.

இது யாழ்ப்பாணத்து, வதிரி வித்துவான்
சி. நாகலிங்கபிள்ளையால் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து
கத்தியரூபமாக இயற்றி
கொழும்பு பிரமஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்
விருப்பத்தின்படி விநாயக சுந்தரவிலாச யந்திர சாலையில்
அச்சிடப்பட்டது.
வதிரி, யாழ்ப்பாணம்

## பதினெட்டாவது சுயம்புநாதப் படலம்

### முனிவர்கள் வினாவுதல்

வேதவியாசருக்கு மாணாக்கராய் மகாபாக்கியசாலியாய் சர்வ சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவராய் விளங்குஞ் சூதரே! பாயிரத்திலே சுயம்பு சேத்திரம் என்று உம்மாற் கூறப்பட்டதன்றோ? அத்தல விஷேடத்தையும் கேட்க விரும்புகிறோம் என்ற நைமிச வனவாசிகள் சூதரை வினாவுதலும் சூதர் சுயம்புநாத சேத்திர மகிமையைச் சொல்லத் தொடங்கினர்.

முனிவர்களே! உங்களால் இப்பொழுது அக்கேள்வி நன்கு வினாவப்பட்டது. ஆகையால், கேட்பதால் பாவங்களெல்லாவற்றையும் அழிப்பதாயும், தரிசிப்பதால் மோட்ச சாதனமாயும் விளங்குகிற சுயம்புநாத தலமான்மியம் நம்மால் இங்கே உங்களுக்குச் சொல்லப்படும். நீங்கள் யாவரும் அன்புடன் கேளுங்கள். உத்தமமாகிய நாதசேத்திரமானது தட்சண கைலாசமாகிய திருக்கோணமலைக்கு வடக்கு இராமசேதுவுக்குக் கிழக்கு ஆகிய இந்த எல்லைக்குள் இருக்கின்றது.

### வைரவன் சுயம்புலிங்கத்தைக் கண்டது.

முன்னொரு காலத்தில் வைரவன் என்னும் பெயருள்ள வேளாளன் ஒருவன் மிகவுந் தரித்திரனாயும், வேளாண்மை செய்து சீவனஞ் செய்பவனாயும் இருந்தான். மக்களும் மனைவியும் தானும் தன் ஆடு மாடுகள் யாவற்றையும் தனக்குரிய வேளாண்டொழிலாற் பொருளீட்டிப் பாதுகாத்து வந்தான். ஒரு நாள் வைரவன் காட்டை வெட்டித்திருத்தித் தானியங்களை விதைக்க எண்ணி, அதற்குரிய கோடாலி கத்தி மண்வெட்டி முதலானவைகளைக் கொண்டு காட்டையடைந்து மரங்களையுங் கொடிசெடிகளையும் வெட்டியழித்து

நெருப்பு மூட்டி அவைகளையெரித்து அழித்தனன். அப்படி அழித்தபோது ஓரிடத்தில் நடுவில் சிறிதிடம் எரியாமல் சுற்றி நாற்புறமும் எரிந்திருந்தது. அது கண்டு வைரவன் மிகவும் அதிசயங் கொண்டு சுற்றி எரிந்த நடுவே கொஞ்சம் இடம் எரியாமல் இருப்பதற்கு காரணம் யாது என்பதை அறியுங் கருத்துடையவனாய் அந்த இடத்திலே போய்ப் பார்த்துக் கைக்கோடாலியால் ஒரு முறை வெட்டினான். வெட்டியபோது அந்த இடத்திலிருந்து இரத்தம் வெள்ளமாய் பெருகிற்று. அவன் அங்கே கவனித்துப்பார்க்கவே அவ்விடத்தில் ஒரு சிவலிங்கமிருக்கவுந்தான் வெட்டியவெட்டு அச்சிவலிங்கத்தின் சிரசிற் பட்டமையினாலே இரத்த வெள்ளம் பெருகிவருதலையுங் கண்டான்.

முனிவர்களே! கேட்பீராக. அவ்வேளாளன் உடனே அச்சங் கொண்டு இ∴து என்ன அதிசயம்! என்று சிந்தித்துப்பின் இந்த விருத்தாந்தத்தைத் தன் சனங்களுக்குப் போய் அறிவித்தான். இவன் சொல்லக்கேட்ட சனங்களெல்லாரும் உடனே அவ்விடத்தை வந்தடைந்து சிவலிங்கமிருக்கவும் இரத்தம் பெருகி வடியவுங் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டனர். எங்களை ஈடேற்றும்பொருட்டன்றோ தயாநிதியாகிய சிவனே. இவ்விடத்தில் வெளிப்பட்டார், என்று மனத்தில் சந்தோஷப்பட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். பின் அவர்கள் தங்கள் தங்கள் ஆபரணங்களைக் கழற்றி இவை சிவனுக்குரியவையென்று சிவார்ப்பணஞ் செய்துவிட்டுத்தங்கள் அறிவுக்கேற்றவாறு பலவகையாகத் தோத்திரம் செய்து வலம் வந்து நமஸ்காரம் செய்து "ஓ" அன்பர்களுக்கு அனுக்கிரகம் செய்வதில் விருப்பமுள்ளவரே! அடியோம் அறியாமையினாலே செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள்க என்று மும்முறை கூறிப் பணிந்து விடைபெற்றுக் கொண்டு தங்கள் இருப்பிடஞ் சென்றனர்.

அந்த நாட்டை அரசு செலுத்தி வரும் வன்னி அரசன் இவ்வதிசய சம்பவத்தைக் கேள்விப்பட்டு மந்திரிக்கு அனுமதி செய்ய மந்திரி போய் இவைகளை அறிந்து ஒரு சிவாலயங்கட்டுவிக்க எண்ணிச் சிற்பநூலில் வல்லவர்களாகிய சிற்பிகளைத் தருவித்துச் சிவாகம விதிப்படி கருப்பக்கிரகம் அருத்த மண்டபம் மகாமண்டபம் முதலானவைகளையும் பிரகாரம் கோபுரம் முதலானவைகளையும் பரிவாரதேவர் ஆலயங்களையும் அமைத்து ஆதி சைவப்பிராமணர்களைக் கொண்டு சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணமியில் சோமவார சுபதினத்தில் நல்ல முகூர்த்தத்தில் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தி, நித்திய பூசையும்

நைமித்தியபூசையும் முறைப்படி நடத்திவந்தான். எந்நாளும் பூசை திருவிழா நடைபெறும்படி வேண்டிய விளைநிலங்களையுங் கிராமங்களையும் ஏற்படுத்தினான்.

## சுயம்புநாதப் படலம்

தானே தோன்றிய காரணத்தினால் அந்த லிங்கம் தான்தோன்றியநாதலிங்கமென்று பெயர் பெற்றதெனவுணர்க. வன்னிய பூபதி தான்றோன்றியப்பருக்கு இவ்விதம் ஆலயங்கட்டிக் கும்பாபிடேகஞ் செய்து ஆதிசைவப்பிராமணர்களைக் குடியிருத்தி நித்திய நைமித்திய காமிய பூசைகளைச் சிவாகம விதிப்படி நடத்தி அப்பூசைகளுக்கு வேண்டிய திரவியமும் விளைநிலங்களும் கிராமங்களும் சர்வமானியமாய் விட்டு என்றும் அழியாதபடி செய்து, தானும் புத்திர பௌத்திர சந்தானப் பெருக்கத்தோடு சுகமாய் வாழ்ந்தனன்.

முனிவர்களே! அவதானத்துடன் கேளுங்கள்! மேற்கூறிய வைரவனுந் தான்தோன்றிநாதர் மகிமையினால் அஷ்ட ஐசுவரியங்களோடும் புத்திர பௌத்திரர்களோடும் சுகமாய் வாழ்ந்து சிவலோகமெய்தினான்.

## அகத்திய முனிவர் பூசித்தது

முற்காலத்தில் அகத்தியமுனிவர் இமயமலையரசன் புத்திரியின் திருக்கல்யாணத்தின்போது பரமசிவனது அனுமதிப்படி பொதிய மலைக்குப் போகும் பயணத்தில் திருக்கோணமலையென்னுந் தெட்சிணகைலாசத்தையடைந்து மகாவலி கங்கையில் முழுகி விதிப்படி நித்திய நைமித்திய கன்மங்களை முடித்துக் கைலாசபதியை வணங்கித் துதித்து விடைபெற்றுக் கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டு இந்தச் சுயம்புநாத சேத்திரத்தையடைந்து சுயம்புலிங்கப் பெருமானைப் பூசித்து வணங்கிக்கொண்டு பின்பு திருக்கேதீஸ்வர தலத்தையடைந்து அங்கே சுவாமி தரிசனஞ் செய்து, பின் பொதியமலையை அடைந்தார். ஆதலால் இத்தலத்துக்கொப்பாகிய தலம் உலகத்தில் இல்லை.

இப்படலத்தைப் படிப்பதால் எல்லாப் பேறுகளும் கிடைக்கமென்று சூதர் அருளிச் செய்தார்.

சுயம்புநாதப் படலம் முற்றிற்று.

# சிவம்: விளக்கவுரை

திரு செ. ஞானமூர்த்தி
(அரசாங்கம் அங்கீகரிக்கப்பெற்ற ஸ்தபதி) மாமல்லபுரம்
காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ் நாடு, தென்னிந்தியா.

சிவம் என்றாலே சிந்தை கலங்கும். மும்மூர்த்திகள் சேர்ந்த அருவுருவ நிலையே லிங்க வடிவமாகும். லிங்கத்தில் சிவ ரூபம் தோற்றம் அளிப்பதால் சிவலிங்கமாகும். இதில் ஒரு முகலிங்கம் மற்றது ஐந்து முகலிங்கம். (பஞ்சமுக லிங்கம்) என்று சிறப்பாக கூறப்பெறுகிறது. லிங்கத்தில், திசைக்கொரு முகமாக ரூபம், கொண்டு, உலகம் முழுவதும் வியாபித்து, மக்களின் இன்ப துக்கங்களை சரிசெய்து கொண்டிருப்பவர். ஐந்து முகம் என்ற எண்ணிக்கையை வைத்து உலகை பார்ப்போமேயானால்

பஞ்சபூதங்கள்: நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்

ஈசுவரன் முகம்: சத்தியோசாதம், வாமம், அகோரம். தத்புருடம், ஈசானம்.

ஐம்புலன்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

பஞ்சாங்கம்: திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்

ஐவகைக்குரவர்: அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்.

ஐம்பால்: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

பஞ்சபாதகச் செயல்: கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குரு நிந்தை

ஐவகை வர்ணம்: வெள்ளை, மஞ்சள், நீலம் பச்சை, சிவப்பு

ஐவகையுணவு, ஐவகையிசைக்கருவி, ஐவகைத்தொழில், ஐவகைத்தாய திரவியம், நிலம், வேள்வி என பல்வேறு நிலைகளில் உலகம் ஐந்து என்ற எண்ணோடு வியாபித்துள்ளது.

உலக தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பஞ்சமுகர் என்பது உலகம் முழுவதும் வியாபித்துள்ளார் என்பது தெளிவாக விளங்குகிறது.

பஞ்சமுக சிவலிங்கம் யாழ்ப்பாணம் எல்லையில் சோழியபுரத்தில் (சுழிபுரம்) சம்பில்துறை என்ற ஊரில் எழுந்தருளியிருப்பது சிறப்புக்கெல்லாம் சிறப்பானது. ஏனெனில் சிவனின் பெயர்களும் சங்கரன், சதாசிவன், அரவணிந்தமூர்த்தி, பூதநாதன், மகேஸ்வரன் என ஐந்தாகவுள்ளன.

சம்பு, வாமதேவன், நீலகண்டன், மகாதேவன், நிருமலன், சூலபாணியன், பசுபதி, சுடலையாடி, காலகாலன், கபாலி, உருத்திரன்,

கைலையாளி ஆலமர் கடவுள், ஐம்முகன், பரசுபாணி, முக்கண்ணன், ஆதி, தற்பரன், நந்தி, ஈஸ்வரன், நீறணிந்தோன், நக்கன், பரமன், யோகி, பகவான், ஞானமூர்த்தி என மேலே குறிப்பிட்டுள்ள சிவனின் பெயர்களுள் சம்பு என்ற பெயரிலேயே சம்பில்துறை எல்லையில், சோழியபுரத்தில் (சுழிபுரம்) என்ற ஊரில் பஞ்சமுக சிவலிங்கம் வீற்றிருப்பது உலகமே ஓரிடத்தில் ஒளிவீசுவது போலத் தோற்றம் அளிக்கிறது. இவ்விதம் இக்கோயில் வரலாறு சிறப்புற்றிருப்பதைக் காணலாம்.

## ஆத்மஜோதி வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

அன்பார்ந்த வாசகர்களே!

இந்து சமயப் பேரவையின் கிளை நிறுவனமாகிய ஆத்மஜோதி தியான நிலையத்தின் ஊடாக ஆத்மஜோதி சஞ்சிகையை பேரவையின் தாபகரும் ஆத்மஜோதியின் நிறுவனரும் ஆகிய ஆத்மீக வள்ளல் நா. முத்தையாஅவர்களின் அன்புக்கட்டளையை ஏற்றுக் கடந்த பலவருடங்களாக கனடாவில் வெளியிட்டு வருகின்றோம்.

ஆத்மஜோதியைத் தொடர்ந்து வெளியிடுவதற்கு நிதி பற்றாக்குறையுள்ளது.

இதனால் நாம் பல சிரமங்களுக்கு ஆளாகின்றோம். எனவே நிதி உதவி செய்ய விரும்புவோர். ஆத்மஜோதி ஆசிரியர் குழுவிடமோ பேரவை நிர்வாகிகளிடமோ தொடர்பு கொள்ளவும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தபால் மூலம் ஆத்மஜோதியைப் பெறுவோர் தபால் செலவுகளையாவது அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும்.

இங்ஙனம்
ஆசிரியர் குழு
தொடர்புகளுக்கு: **416 724 6240 416 286 0457 905 944 9021**

### ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| காத்திகேசு இரத்தினம் ஆசிரியர் நினைவாக (2007) | $200.00 |
| திருமதி சின்னராசா இராசமலர் (2008) | $100.00 |
| திரு. கனகசபை கந்தையா (2009 ஏப்ரல் - யூன்) | $150.00 |
| திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் (2009) | $100.00 |
| திரு. இராசையா மகிந்தன் (2009) | $50.00 |

# திரு வீழி மிழலை

கந்தையா - சண்முகம்
இளைப்பாறிய அதிபர்

திருமணம் தடைப்பட்டு வரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அருள்பாலிக்கும் சொர்க்கபூமி திருவீழி மிழலை. தஞ்சையில் அமைந்து உள்ள திவ்விய தேசம் திருவீழிமிழலை. சிவன் அருள் பெற்ற திருஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசர் ஆகிய திருவருட் செல்வர்களின் திருவடி பதிந்த புண்ணிய பூமி.

திரு வீழி மிழலையில் மழையின்றிப் பஞ்சம் தலையெடுத்தது. அச் சமயம் திருவீழி நாதர் இவ் இரு அடியார்களின் கனவிலும் எழுந்தருளினார். இயற்கை சதி செய்யும்போது இறைவனைத்தவிர வேறு அடைக்கலம் ஏது? இறைவன் கனவிலே மொழிந்தாற்போல "பஞ்சத்தைக் கண்டு அஞ்சற்க. நாள்தோறும் திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும், மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு பொற் காசுகளை வைத்து அருள் செய்வோம் என்ற வண்ணம் ஞானசம்பந்தரும் அப்பர் அடிகளும் திருவீழி மிழலையில் பொற் காசுகளைப் பெறுகின்றனர். ஆலயத்துக்கு வடபால் உள்ள மடத்தில் தங்கி இருக்கின்றனர்.

நாட்டில் கடும் பஞ்சம் மழையின்றி நிலம் வறண்டு விளைச்சல் இன்றி மக்களோடு கால் நடைகளும் பசியால் வாட மக்களது உயிர்காக்கும்படி தீம்தமிழ்ப் பாக்களால் பாடி உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கி இருவரும் இறைவனை மன்றாடினார். கைமேல் பலன். இறைவனின் திருவிளையாடலால் ஒன்று அப்பர் அடிகளுக்கு நல்ல காசும் ஆளுடையபிள்ளைக்கு சற்று மாற்றுக் குறைந்த காசும் கொடுக்கப்பட்டது. இதனால் அப்பர் அடிகள் காசுக்கு அதிக பொருளும் ஆளுடையபிள்ளையார் காசுக்குக் குறைவான பொருளும் கிடைத்தன.

ஞானசம்பந்தர், "அப்பர் அடிகள் செய்த கோயில் திருப்பணிகளின் பயனாகத் தான் அவருக்குப் பெருமான் நல்ல காசுகளை அருளுகிறார் போலும் என்று எண்ணினார். திருவீழி மிழலைப் பெருமானைப்பணிந்து "வாசிதீரவே காசு நல்குவீர்" எனும் திருப்பதிகம் பாடினார். சிவபரம் பொருளுக்கு தன்னையே ஒப்படைத்துவிட்டு, அடிமையாக்கிக் கொண்டு சிந்தை செய்வார்க்கு ஏதும் துன்பமே இல்லை. இன்பமே வரும்.

இறைவன் சம்பந்தப் பெருமானின் திருப்பதிகத்தைக்

கேட்பதற்கென்றே இப்படியொரு திருவிளையாடலைப்புரிந்தார். இறைவன் தனக்குள் சிரித்துக்கொண்டு மறுநாளில் இருந்து சம்பந்தருக்கும் வாசியில்லாத காசே கிடைக்கிறது.

இவ்வாறு சைவ சமயத்தால் சிறப்புப் பெற்ற இத்திருத்தலம் புராண சிறப்பும் பெற்றிருந்தது. ஒரு கல்ப காலத்தில் நாராயணர் ஆயிரத்தெட்டு தாமரை மலர்களால் சிவபெருமானைப் பூஜித்துக் கொண்டிருந்தார்.

இந்த ஒப்பற்ற பூசையின் மகிமையை உலகறியச் செய்யத் திருவுளம் கொண்ட முழுமுதற் பரம்பொருளான விநாயகப் பெருமான் ஒரு தாமரையை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டார். நாராயணர் குறைந்து போன அந்த ஒரு மலருக்காகத் தமது கமல நயனத்தையே அர்ப்பணம் செய்து பூஜையை முடிக்கப் போகும் தருணத்தில் சிவபெருமான் திருமுகம் மலர்ந்து ஸ்ரீவிஷ்ணுவிற்கு சக்ராயுதம் அளித்தார். ஸ்ரீவிஷ்ணு பெருமான் நேத்திரத்தையே அர்ப்பணம் செய்யத் துணிந்ததால் இத்தலத்திற்கு நேத்திரார்ப்பணபூமி என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

இங்கு கோயில் கொண்ட எம்பெருமானின் திருநாமம் திருவீழிநாதர் - விழி அழகேசர் என்பதாகும். அம்பாள் சுந்தரகுசாம்பாள் - காத்யாயினி என்பதாம்.

ஒரு முறை அம்பாள் காத்தியாயன மகரிஷி ஹோம குண்டத்தில் நின்றும் சிறுகுழந்தையாகத் தோன்றினாள். சிவபெருமானுக்கு, காத்யாயன மகரிஷி, அக்னியில் நின்றும் அவதரித்த அந்த குழந்தைக்கு காத்யாயனி என்ற நாமம் சூட்டி இறைவனுக்கு மணம் புரிந்து, மணக்கோலத்துடன் அத்திருநகரில் கோயில் கொண்டார்.

அன்று முதல் திருவீழிமிழலை ஒரு கல்யாண ஷேத்திரமாக மாறியது. இறைவனிடம் இணக்கம் பெற்றால் அளவற்ற அமைதியும் ஆனந்தமும் அடைவீர்.

---

8ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்படியான இயற்கை வாழ்வோடு இறைபக்தி நிறைந்தவர்களாயும் வாழ்ந்து எம்மையும் வழிப்படுத்தி ஆத்மீகத்தை உயிரினும் மேலாய் வளர்த்தனர். கோயிற்கடமைகள் செய்தல், அடியாரைப் போற்றல், விரதம் அனுட்டித்தல், திருவிழாச்செய்தல், நூல்களைப் படித்தல் போன்ற தெய்வீக வழியிலும் தம்மை நெறிப்படுத்தினர். இப்படியான ஆரோக்கியமான சூழ்நிலை அவர்களை மேன்மையுடன் வாழவைத்தது. நாம் சைவ சமய தத்துவங்களையும் உண்மைகளையும் திருமுறைகளையும் அறிந்து உய்தி பெறுவோமாக.

# சைவர்களின் சமயக்கொடி

சித்தாந்தரத்தினம் சைவசித்தாந்த கலாநிதி
க. கணேசலிங்கம்

சைவர்கள் மத்தியில், குறிப்பாக ஈழத்தில், அவர்களின் சமயக்கொடியாக நந்திக்கொடி இடம்பெற்று வருகிறது. இக்கொடி குறித்து பல்வேறு கருத்துக்கள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் காலத்துக்குக் காலம் வெளிவருகின்றன. இவை பொதுவாக நந்திக் கொடியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக உள்ளன. அதேவேளை பல கருத்துக்கள் தெளிவில்லாமலும் தவறாகவும் உள்ளன. இத்தகைய பின்னணியில் இக்கட்டுரை எழுதப்படுவது குறிப்பிடத்தக்கது.

**கடவுளரின் கொடி**

சைவர்களுக்குச் சமயக்கொடி என்ற ஒரு குறிப்பிட்ட கொடி முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை. சைவசமயம் உள்ளிட்ட பல இந்திய சமயங்கள் அவற்றின் கடவுளரின் கொடியாக சிலவற்றைக் கொண்டுள்ளன. விடைக்கொடி, சேவற்கொடி, கருடக்கொடி ஆகியவை சில உதாரணங்கள். இவை முறையே சிவனுக்கும், முருகனுக்கும், திருமாலுக்கும் உரிய கொடிகளாக விளங்குகின்றன.

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் இடபத்தை ஊர்தியாகவும், கொடியாகவும் கொண்டவர் என்ற செய்தி பழந்தமிழ் நூல்களிற் காணக்கூடியது. ஏற்றினைக் கொடியாக உடையவர் என்ற செய்தி புறநானூற்றிலும் (புறம் 56) ஏற்றினை ஊர்தியாகக் கொண்டவர் என்ற கருத்து கலித்தொகையிலும் (கலி 150) உள்ளன. கல்லாலிடத்திலே "விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எழுத்து" சிவன் பாண்டியனாகி வந்த காட்சி தரப்படுகிறது.

சிவனின் வாகனம் விடை என்பதைக் கூறும் செய்திகளை பல திருமுறைகளில் உள்ளன. "விடை ஏறி, ஏறுகந்து ஏறிய நிமலன்" போன்ற திருமுறைத் தொடர்கள் எடுத்துக்காட்டாக உள்ளன.

சிவனின் வாகனமாகிய இடபமே அவனின் கொடியாகவும் உள்ளது என்பதையும்திருமுறைகளில் இருந்து அறியலாம். "ஏறுடைக் கொடியான்", "விடையார் கொடியுடையவ் வணல்", "கொடியணி விடையர்" போன்றவை சம்பந்தர் தேவாரத்தில் காணக்கூடியன.

“ஏறுடைக் கொடியுடையான்”, “எடுத்தவெல்கொடி ஏறுடையாய்”, “நீள்கொடி ஏறுடையார்” போன்றவை அப்பர் தேவாரத்தில் உள்ளன. “ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்” என்று திருவாசகம் சிவனைப் போற்றுகிறது.

ஆகவே சங்க நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றில் இருந்து சிவன் இடபத்தை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டவன் என்பதை அறிய முடிகிறது. இந்நூல்கள் எவற்றிலும் சிவனின் கொடி நந்திக்கொடி என்று கூறப்படவில்லை என்பது சிந்தனைக்குரியது.

**நந்தி என்ற சொல்**

நந்தி என்ற சொல் பல பொருள்களில் நூல்களில் வழங்கப்படுகிறது. நந்துதல், நந்தல் என்ற சொற்களுக்கு வளருதல், விளங்குதல், அதிகரித்தல், ஆக்கமடைதல் போன்ற பொருள்கள் உண்டு. இதனடிப்படையில் நந்தி என்ற சொல்லுக்கு இறையருளை வளர்ப்பவர், அதனை விளக்கமுறச் செய்பவர், அதனைக் கூட்டுபவர் என்ற பொருள்கள் உண்டு என்பது அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது.

‘ஐந்து கரத்தனை’ என்று தொடங்கும் திருமந்திரப் பாடலில் நந்திமகன் என்ற தொடர் வருகின்றது. இதில் வரும் நந்தி சிவனைக் குறிப்பது. (இப்பாடல் திருமந்திரத்தில் இடைச்செருகலாக வந்தது என்ற கருத்தும் அறிஞர் உலகில் உள்ளது.)“நந்தி நாமம் நமச்சிவாயவே” என்ற சம்பந்தர் தேவாரத் தொடரில் நந்தி என்ற சொல் சிவனைக் குறிப்பதாக உள்ளது. “நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின் நந்திகள் நால்வர்” என்ற தொடர் திருமந்திரத்தில் வருவது. இதில் நந்திகள் என்ற சொல் ஞானிகளையும், அருளாளர்களையும் குறிப்பதாக உள்ளது. அருள்நந்திசிவம், நமிநந்தி அடிகள் போன்ற பெயர்களில் வரும் நந்தி இத்தகையதே. சிவகணநாதராக நந்திதேவர் கொள்ளப்படுவது சைவத்தில் காணக்கூடியது.

சமணசமயத்திலும் நந்தி இடம்பெறுகின்றது. சமணரின் பட்டப்பெயராக கனகநந்தி, புட்பநந்தி, பவளநந்தி போன்றவை உள்ளன. நந்தி என்பதற்கு இடபம் என்பதும் ஒரு பொருள். இது அகராதிகளில் காணக்கூடியது. பல்லவ மன்னன் பலரின் பெயர் நந்தி என்ற

சொல்லைக் கொண்டிருக்கின்றது. நந்தி நகரம் போன்ற சொற்கள் ஊர்களின் பெயர்களாக உள்ளன.

**தவறான கருத்து**

சைவசமயத்துக்கென்று ஒரு தனிக்கொடி இல்லாத நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் நந்திக்கொடி என்ற பெயரில் இடபக் கொடி ஈழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு வழிகோலியது அன்பர் சி. தனபாலா என்பவரின் தன்னலமற்ற முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் வாகனமான இடபத்தை நந்திக்கொடி கொண்டிருப்பது சிறப்பானது. சைவ பாரம்பரிய வழக்கில் உள்ள இடபக்கொடி அல்லது விடைக்கொடி என்ற பெயரில் இக்கொடி அமைந்திருந்தால் அது மேலும் சிறப்படைந்திருக்கும்.

நந்திக் கொடியையும் அதனை அறிமுகப்படுத்தும் திரு. தனபாலா அவர்களையும் போற்றிப் பல கட்டுரைகள் ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைளில் வெளிவந்துள்ளன. இவற்றில் பல சைவம் குறித்த தவறான கருத்துக்களைக் கொண்டு சைவ மக்களை குழப்பமடையச் செய்வதாக உள்ளன.

இத்தகைய கருத்துக்களில் ஒன்று பதி, பசு, பாசம் தொடர்பானது. பதி என்றால் இறை, பசு என்றால் உயிர், பாசம் என்றால் தளை அல்லது கட்டு என்பதும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் பாசம் எனப்படும் என்பதும் சைவர்கள் பலரும் அறிந்ததே. ஆயினும் ஒரு பத்திரிகையில் (23.10.2004, வீரகேசரி) "சிவபெருமான் பதியாகவும், பார்வதி பசுவாகவும், நந்தி பாசமாகவும் கொள்ளப்படுகிறது'' என்று எழுதப்பட்டள்ளது. இன்னொரு பத்திரிகையில் (10-11-2006), தினக்குரல்) வேறொருவர் "சைவசித்தாந்தக் கருத்துக்களின் படி பதி, பசு, பாசம் என்பன முறையே சிவன், பார்வதி, நந்தி ஆகியோரைக் குறிப்பதாகக் கூறுவர்'' என்று எழுதப்பட்டுள்ளது. இத்தகைய தவறான கருத்துக்களால் சைவமக்கள் குழப்பமடைகின்றனர் சைவமும் பொலிவிழக்கின்றது.

"சிவனுக்குரிய கொடி நந்திக்கொடி. நந்தி என்பது அதிகார

நந்தி'', "ப்ரிஷ்' வடமொழிச் சொல் ரிஷப அல்லது நந்தி என்ற பொருள் கொண்டது. அது காலத்தோடு தொடர்புடையது,'' என்பன போன்ற கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. இவை தெளிவற்ற தவறான கருத்துக்களாகவும் சைவர்களுக்கு பயனற்றவையாகவும் உள்ளன.

"இந்துசமயக் கொடி நந்திக்கொடி", "இந்துக்கள் வாழும் இடங்களில் நந்திக் கொடி இடம்பெற வேண்டும்'' என்பன போன்ற கருத்துக்களைப் பலர் முன்வைத்துள்ளனர். இந்து சமயம் என்பது சைவம், வைணவம் போன்ற பல இந்திய மதங்களைக் குறிக்கும் ஒரு பொதுவான பெயர் அது. ஒரு தனிச்சமயம் அல்ல. இந்துசமயத் தொகுதியில் ஒன்றான வைணவத்தில் நந்திக்கும் நந்திக்கொடிக்கும் இடமில்லை. சைவர்கள் தவிர்ந்த பிற இந்துக்கள் இக்கொடியை ஏற்கமாட்டார்கள். இந்த நிலையில் இந்து சமயக் கொடி நந்திக்கொடி என்று கூறுவது அர்த்தமற்றது.

**சைவக்கொடி**

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் கொடி இடபக்கொடி. இதுவே இன்று சைவர்களின் கொடியாகத் திகழ்கிறது. இக்கொடியிலுள்ள இடபம் குறித்து சைவர்கள் அறிந்திருப்பது பயனுள்ளது.

சிவன் கோயில்களில் இருக்கும் மூலவர் பதியாகிய இறைவனையும், நந்தி என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் இடபம் பக்குவம் பெற்ற ஆன்மாவையும், பலிபீடம் ஆன்மாவை விட்டு நீக்க வேண்டிய பாசத்தையும் குறிக்கும். இங்கு குறிப்பிடப்படும் இடபத்தை 'இடபதேவர்' என்று தவத்திரு, ஆறுமுகநாவலர் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. இது சிவனின் கொடியிலுள்ள இடபம் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. "சிவன்கோயில்களில் கொடியேற்றத் திருவிழாவில் ஏற்றப்படும் கொடியிலும்'' இடபம் இருக்கிறது. இது ஆன்மாவைக் குறிப்பது. கொடியேற்றம் ஆன்மா இறைநிலைக்குச் செல்வதை உணர்த்துவது.

சிவனின் வாகனமாக அமைந்த இடபம் 'ங' வடிவில் அமைந்துள்ளது. இது அறத்தைக் குறிப்பது. அறவிடை என்றே கூறப்படுவதும் உண்டு. அவனின் கொடியிலும் இந்த விடையே உள்ளது. 'ஙகர

வெல் கொடியான்' என்று அப்பர் அடிகள் சிவனை வருணிக்கிறார். 'ஙப்போல் வளை' என்பது ஆத்திசூடி. ஙகர எழுத்துக்கள் பதின்மூன்றில் ங், ங என்ற இரண்டு எழுத்துக்கள் மட்டுமே பயனுள்ளவை. மற்றைய பதினொரு எழுத்துக்களும் பயன்படு வதில்லை. ஆயினும் ங், ங என்ற இரு எழுத்துக்களும் மற்றைய எழுத்துக்களைத் தழுவி ஒரு குடும்பமாக நிற்கின்றன. இதுபோல் நீயும் பிறரைத் தழுவி அவர்களுககு உதவி செய்வதை உனது அறமாகக் கொள்ள வேண்டும். இதுவே குறிப்பிட்ட ஆத்திசூடியின் பொருள்.

இறைவனும் ங போல உயிர்களுக்கு உதவும் அறத்தைச் செய்கிறான். இந்த அறச் செயலில் அவன் எப்பொழுதும் வெற்றி காண்கிறான். இதை உணர்த்துவதாக அவனின் கொடி இருக்கிறது. இது அறக்கொடி. அதனால் அது 'ஙகர வெல் கொடி' என்று அப்பரடிகளால் வர்ணிக்கப்படுகிறது. அறம் வெல்லும் என்பதும் உணர்த்தப்படுகிறது. இந்தக் கொடி அறக்கொடி என்பதால் பிறசமயங்களுக்கும் ஏற்புடையதாகின்றது.

## முடிவுரை

சிவன்கோயிலில் சிவனைப் பார்த்திருக்கும் நந்தி எனப்படும் இடபம் பக்குவம் பெற்ற ஆன்மா. இந்த இடபம் வேறு, சிவனின் கொடியில் இருக்கும் இடபம் வேறு. திருவிழாவில் ஏற்றப்படும் கொடியிலுள்ள இடபம் இறைநிலையடைய வேண்டிய ஆன்மாவைக் குறிப்பது. இதுவும் சிவனின் கொடியிலிருக்கும் இடபமல்ல.

சிவனின் வாகனமாக அமைந்த இடபம் அறத்தைக் குறிப்பது. இறைவன் இதன் மேல் ஏறி வந்து உயிர்களுக்கு அருளுகிறான். இது அவனின் அருட்செயலாகவும், அறச்செயலாகவும் விளங்குகிறது. சிவனின் வாகனமாக அமைந்த இடபமே அவனின் கொடியிலும் இருக்கிறது. இதனால் அவனின் கொடி அறக்கொடி என்றும், அறவிடைக்கொடி என்றும், விடைக்கொடி என்றும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் விடைக்கொடியே இன்று சைவர்களின் சமயக் கொடியாக திகழ்கிறது. இக்கொடி நந்திக் கொடி என்ற பெயரில் ஈழத்தில் பாவனையில் உள்ளது.

(சிவத்திருமன்றம், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில், 03-03-2007 இல் "சைவசமயக்கொடி" பற்றிய கருத்தரங்கை நடத்தியது. அதில் இடம்பெற்ற கட்டுரை இது).

# சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்

கடந்த இதழ் தொடர்ச்சி:

## சுண்ணம் இடித்தல்

பேரிதாடனம் செய்து அதன் பின்னர் உரலில் பூமி தேவியையும் உலக்கையில் மேருமலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்னும் உலக்கை நாட்டி - திருவாசகம்) உரலில் உள்ள அறுகு, மஞ்சள்மா என்பவற்றை எண்பத்தொரு பதமந்திரம் சொல்லி மூன்று தரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப் பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்ச புராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப் பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து, பிரேதத்திற்கும் திலகமிட்டு பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது பேரப்பிள்ளைகள் பிரேதத்தைச் சூழ நின்று பந்தம் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வதுதான் முறையானது. நம்மவர்களின் ஆசாரக்குறைவு கருதி பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப (ஸ்நானம்) நீராட்டல் முடித்து அதன் மேல் சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு யாத்திராதானமும் நிறைவு செய்து குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், பிரேதத்தின் காலில் பூப்போட்டு வணங்குவர், மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப்புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். அங்குள்ளவர்களுள் வயதில் முதிர்ந்த சுமங்கலி முதலில் வாய்க்கரிசி இடுதலும் கர்த்தாவின் மனைவி அல்லது இறந்தவரின் மனைவி இறுதியாக வாய்க்கரிசி இடுதலும் நடைமுறையில் உண்டு. (வாய்க்கரிசி பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்ந்தது.)

கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறைநாளி(தீபம், நெல் நிறைந்த சேர்) யைப் பிரேதத்தில் கையால் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றை சேலை முந்தானையில் முடிந்து விடவும்.

பிரேதத்தின் கீழேயுள்ள துணியையும் மேலே உள்ள

துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி தலைப் பகுதியில் ஒரு முடிச்சிடவும். கீழே உள்ள ஆர்க்கை துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களில் பச்சை மரத்தில் கட்டப்பட்ட பாடையில் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கில் பிரேதத்தை வைக்கவும். (பாடை கமுக மரத்தால் கட்டப்படும்) பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்தபின் பிரேதம் மயானத்திற்குக் கொண்டுசெல்லப்படும்.

காற்பக்கம் முன்னாக கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்பை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னே வர, வாத்தியம், சங்கு ஒலிக்கத் திருமுறைப்பாடல்கள் பாடியவாறு, அஸ்திர மந்திரத்துடன் பொரி தூவியவாறு சுடலையை அடைந்து தலை தெற்கே இருக்குமாறு இறக்குக.

வடக்குத் , தெற்காக விறகுகளை அடுக்கி அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து தலைப்பக்கத்தில் வைத்து அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து கும்பநீரில் அரிசியை நனைத்துப் பொன் அல்லது காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும்.

இடத்தோளிலே குடத்தையும் வலக் கையிலே கொள்ளியையும் கொண்டு இடமாக மூன்று முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும், குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரைச் சிதையிலே தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை முன்பக்கத்திற் போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டில் சென்று பவித்திரம், உபவீதம் என்பவற்றைக் கழற்றிச் சிதையில் போட்டு நமஸ்காரம் செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி நிவாபாஞ்சலி தருப்பணம் செய்துகொள்ளவும்.

இறந்தவர் சுமங்கலியாயின் கணவன் முந்தானையில் உள்ள தேங்காயை உடைத்து வைத்துத் தாலி கழற்றிய பின் கொள்ளி வைத்தல் நிகழும்.

நிவாபாஞ்சலி தருப்பணம் - பிதிர்கள் பொருட்டு இருகைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியாபனத்திலும் செய்யலாம்.

சுற்றத்தவரோடு கர்த்தா கத்தியுடன் வீட்டுவாயிலுக்கு வந்து வேப்பிலை கடித்து உமிழ்ந்து கைகால் கழுவிப்பின் நீராட வேண்டும்.



15ஆம் பக்கம் பார்க்க

வீட்டைக் கழுவி சுத்தம் செய்யவும். தூய்மையாய்த் தயாரித்த சோறு, கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்துத் தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர் உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால் அவ் ஆசௌச எல்லைவரையும் ஆசௌசம் கொள்ள வேண்டும்.

அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி நீர்நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப்பாராயணம் செய்தல் வேண்டும்.

## அமரத்துவச் செய்தி




இந்துசமயப் பேரவைத் திருக்கூட்டத்தின் மூத்த உறுப்பினர் **திருமதி பக்கீர்சாமி இராஜமணி** அவர்கள் 17-05-2009 அன்று ரொறன்ரோவில் இறைவனின் திருவடியை அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பேரவை உறுப்பினர்களும், திருக்கூட்டத்தினரும், நிர்வாகிகளும் பிரார்த்திக்கின்றனர்


# R & S AUTO SALES

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**



RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**5310 Finch Ave. Unit 23**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**

# சிவதீட்சை

## (சைவ அநுட்டான விதி)

முதுபெரும் புலவர் ச. சுந்தரேசம்பிள்ளை
சிதம்பரம்

கடந்த இதழ் தொடர்ச்சி:

**5. ஐந்தெழுத்தில் அம்பலவன் என்கிறார்களே அது எப்படி?**

நடராசர் திருவுருவில்

1. ந - திருவடி, ம - திருவயிறு, சி - திருத்தோள், வ - திருமுகம், ய - திருமுடி, இது தூல பஞ்சாட்சரம் பாதாதி கேசமுறை.
2. சி - உடுக்கை ஏந்திய கை, வ - இடக்கால் பாதத்தைக் காட்டும் கரம், ய - அஞ்சேல் எனக் காட்டும் அபயகரம், ந - தீ யேந்தும் இடக்கரம், ம - முயலகனைக் கீழே அழுத்தும் வலக்கால்.

இது சூட்சும பஞ்சாட்சரம் கேசாதி பாதமுறை.

**6. ஐந்தொழிலை அம்பலவரிடம் காட்டுங்கள்:**

1. படைத்தல் - உடுக்கை ஏந்திய கரம்
2. காத்தல் - அபய கரம்
3. அழித்தல் - தீ ஏந்திய கரம்
4. மறைத்தல் ஊன்றிய வலத்திருவடி
5. அருளல் - தூக்கிய திருவடி

குறிப்பு:

(மேலே வளைந்திருக்கும் திருவாசி ஓங்காரப் பிரணவம்) தீட்சைக்கும் இதற்கும் சம்பந்தமில்லையேனும் சைவர்கள் தெரிந்து கொள்ள நடராசர் உருவ விளக்கம் தரப்பெற்றது. சாத்திர நூலின் படி தரப் பெற்றது.

**7. இம்மைப் பயன் மறுமைப் பயன் இரண்டும் பெற யாது செய்தல் வேண்டும்?**

இம்மைப் பயனுக்குக் குரு உபதேசப்படி பிரணவத்துடன் நகராதி தூல பஞ்சாட்சரத்தை காலைவழிபாட்டில் செபிக்க வேண்டும்.

மறுமைப் பயனுக்குக் குரு உபதேசப்படி பீஜ மந்திரம் சேர்த்து பிரணவத்துடன் சிகராதி சூட்சும பஞ்சாட்சரத்தை வழிபாட்டில் செபிக்க வேண்டும்.

**8. காலை எத்தனை மணிக்குள் மாலை எத்தனை மணிக்குள் சைவ அநுட்டானம் செய்தல் வேண்டும்?**

அதிகாலை 4:30 மணிக்குமேல் காலை 8:30 மணிக்குள் காலைக்கடன் முடித்து அநுட்டானம் செய்தல் வேண்டும். மாலை 5:30 மணிக்கு மேல் 7:30 மணிக்குள் அநுட்டானம் செய்ய வேண்டும்.

**9. தீட்டுக் காலத்திலும், வெளியூர் பயணக் காலத்திலும் அநுட்டானம் செய்யலாமா? செய்வதானால் எந்த முறையில் செய்ய வேண்டும்?**

வாழும் வீட்டில் நெருங்கிய உறவினர் மறைந்து விட்டால் பதினாறுவது நாள் காரியம் முடியும் வரை அநுட்டானச் சடங்குள் ஏதும் செய்யலாகாது. ஆனால் காலை மாலை செபம் மட்டும்மனதிற்குள் செய்தல் வேண்டும். காரியம் முடிந்த மறுநாளிலிருந்து வழக்கம் போல் சடங்குகள் செய்க.

தெருவில் யாரேனும் மறைந்து விட்டால் எடுக்கும் வரை ஏதும் செய்யாமல் எடுத்த பின் குளித்து செபம் மட்டும் செய்யலாம்.

பதினாறாம் நாள் காரியம் முடிந்த பின் நீராடி நீறணிந்து முன்பு போல் அநுட்டானம் செபம் முதலியன செய்யலாம்.

பயணத்தின்போது சடங்கு ஏதுமின்றி காலை மாலை நீறணிந்து செபம் மட்டும் செய்ய வேண்டும்.

**10. மகளிர் மாத விலக்கின் காலத்தில் அநுட்டானம் செய்ய வேண்டுமா?**

செய்ய வேண்டும் எப்படி என்றால் மகளிர் மாத விலக்கு ஆனது முதல் நான்கு நாள் வரை சடங்குகள் ஏதும் செய்யாமல், காலை மாலை கை கால் தூய்மை செய்து நீறணிந்துசெபம் மட்டும் செய்க.

**11. நோயுற்ற காலத்திலும் நீராட முடியாத காலத்திலும் எவ்வாறு அநுட்டானம் செய்வது?**


நோயுற்ற காலத்திலும் நீராட முடியாத காலத்திலும் வெந்நீரில் துணியை நனைத்துப் பிழிந்து ஈரத்தால் உடலைத் துடைக்கவும் நீறணிந்து காலை மாலை செபம் மட்டும் செய்யலாம் அப்போது

"கூர்வாள் அரக்கன் தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கும் சிற்றம் பல மேய
நீரார் சடையானை நிர்த்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே"

என்ற சம்பந்தர் தேவாரத்தை,. மும்முறை ஓதுக; நோய் நீங்கி சுகம் பெறலாம்.

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## சிவயோகசுவாமிகளின் 45ஆவது குருபூசையும் நற்சிந்தனை முற்றோதலும்



ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களினால் 1994ஆம் ஆண்டு யூலை மாதம் தாபிக்கப்பட்ட இந்து சமயப் பேரவை 1995ஆம் ஆண்டு தொடக்கம் சிவயோக சுவாமிகளின் குருபூசையைக் கொண்டாடி வருகின்றது. 1995ஆம் ஆண்டு குருபூசைக்கு ஆத்மஜோதியார் அவர்களே தலைமை வகித்தார். கனடாக் கந்தசாமி ஆலயத்தில் வெகு விமரிசையாக அது நடத்தப்பட்டது. தொடர்ந்து ஐயப்பன் ஆலயம், நாகபூசனி ஆலயம் போன்ற ஆலயங்களிலும் சுவாமிகளின் வருடாந்தக் குருபூசையை நடத்தி வந்த பேரவை 1999ஆம் ஆண்டு தொடக்கம் சுவாமிகளின் மகாகுருபூசையை முன்னிட்டு நற்சிந்தனை முற்றோதலை ஆரம்பித்தது. நற்சிந்தனை முற்றோதலை கனடா கந்தசாமி கோயிலில் ஆரம்பித்த பேரவை பின்னர் நாகபூசனி அம்பாள் ஆலயம், நல்லூர் முருகன் ஆலயம் போன்ற ஆலயங்களில் நடத்தி வந்தது.

11ஆவது வருட நற்சிந்தனை முற்றோதல் 04-04-2009 சனிக்கிழமை மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வெகுசிறப்பாக ஓதப்பட்டது. காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட முற்றோதல் இரவு 9 மணிக்கு நிறைவுற்றது. நண்பகல் விசேட அபிசேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர், உறுப்பினர்களுடன் சுவாமிகளின் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். திரிகால ஞானியாகிய சுவாமிகள் சூக்கும நிலையில் முற்றோதல் நிகழ்வில் பிரசன்னம் ஆகியிருந்தமையை தாம் உணர்ந்ததாக பேரவையின் திருக்கூட்டத்தினர் சிலர் பேசிக் கொண்டனர்.

## தாயக மக்களின் இடர் தீரப் பிரார்த்தனை

10-04-2009 வெள்ளிக்கிழமை மாலை, 3 மணி தொடக்கம் 7 மணி வரை பேரவையினரால் தாயக மக்களின் இடர் தீரப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

மிகவும் ஈடுபாட்டுடன் தங்கள் அன்பு கலந்த உணர்வலைகளை வெளிப்படுத்தியபடி பக்தர்கள் பிரார்த்தனையில்

கலந்து கொண்டனர். தாயக மக்களின் நலன் வேண்டி சிறப்புப் பூசைகளும் நடத்தப்பட்டன. பேரவையின் தலைவர் வி.கந்தவனம் தாயக மக்களின் இன்னல்களை விபரித்து உரைநிகழ்த்தினார் செயலாளர் சிவமுத்துலிங்கம் நன்றியுரை கூறினார்.

## தமிழ் வருடத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரார்த்தனை

13-04-2009 தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அமைந்துள்ள பேரவையின் குருபீடத்திற்கு முன்னிலையில் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரை விசேட பிரார்த்தனை வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

## 10வது வருடமாக திருமுறை முற்றோதல்

தமிழ் மக்களின் கருவூலமாகிய திருமுறைகளை பேணுங்கள், போற்றுங்கள், மக்களிடையே பரப்புங்கள் என்ற பேரவையின் தாபகர் ஆத்மஜோதியார் அவர்களின் அன்புக் கட்டளையை சிரமேற்கொண்டு பேரவையினர் கடந்த 10 ஆண்டுகாலமாகப் பன்னிருதிருமுறை முற்றோதலை நடத்தி வருகின்றனர். கடந்த 10 வருடமாக நூற்றக்கணக்கான திருக்கூட்டத்தினர் படித்துப் பயன் பெற்றுள்ளனர். 18-04-2009 சனிக்கிழமை தொடக்கம் மீண்டும் திருமுறை முற்றோதலை ஆரம்பித்து மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடத்தி வருகின்றது.

பேரவையின் திருக்கூட்டத்தினருடன் திருமுறைகளில் ஈடுபாடு உள்ள புதிய அடியார்களும் திருமுறைகளைப் படித்து பயன்பெறுகின்றனர்.

## நடேசர் அபிசேகம்



திருமுறை முற்றோதல் ஆரம்பித்த 18-04-2008 சனிக்கிழமை நடேசர் அபிசேக தினமாதலால் மேற்படி ஆலயத்தில் நடேசர் அபிசேகம் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

## திருநாவுக்கரசர் குருபூசை

20-04-2009 திங்கட்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 8 மணி வரை அப்பர் சுவாமிகளின் குருபூசை வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. நாவுக்கரசரின் 4ஆம் 5ஆம் 6ஆம் திருமுறைகளில்

தெரிந்தெடுத்த பதிகங்களைத் திருக்கூட்டத்தினர் பாராயணம் செய்தனர். சிவபெருமானுக்கு அபிசேக ஆராதனைகளும் சிறப்புப் பூசைகளும் நடத்தப்பட்டு அடியார்களுக்கு பிரசாதமும் வழங்கப்பட்டது. பேரவையின் தலைவர் திரு. வி. கந்தவனம், கனடா எழுத்தாளர் இணையத் தலைவர் திரு. த. சிவபாலு ஆசிரியர், செயலாளர் சிவ முத்துலிங்கம் ஆகியோர் சிறப்புரைகளாற்றினர்.




## சேக்கிழார் குருபூசை




பெரியபுராணம் என அழைக்கப்படும் திருத் தொண்டர் புராணத்தை சைவ உலகத்திற்கு தந்த சேக்கிழார் பெருமானின் குருபூசை 28-05-2009 வியாழக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. பெரிய புராணத்தில் உள்ள பாடல்களில் தெரிந்தெடுத்த பாடல்கள் ஓதப்பட்டது. சிவபெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனையும் பேரவையின் குருபீடத்தில் அமைந்துள்ள சேக்கிழார் பெருமானுக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளும் நடத்தப்பட்டு பிரசாதமும் வழங்கப்பட்டது.

## ஆத்மஜோதியாரின் ஜெயந்தி விழா




05-06-2009 வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் பேரவையின் தாபகர் ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது திருக்கூட்டத்தினர் திருமுறைப்பசனை வழிபாடுகள் நிகழ்த்தினர். தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் செயலாளர் சிவ முத்துலிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர். சிறப்புப் பூசை வழிபாடு களுடன் விழா இனிது நிறைவேறியது.

## திருஞான சம்பந்தர் குருபூசை



08-06-2009 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் திருஞானசம்பந்தர் குருபூசை வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட ஞானசம்பந்தரின் பாடல்கள் பசனை முறையில் பாடப்பட்டது. காளி, அம்பாள் ஆலயத்தில் பரிகாரமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனையும் சிறப்புப் பூசை வழிபாடுகளும் செய்யப்பட்டன.

## சிதம்பர ஆதிநடராசர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல்



ஆதி அருள் நெறி மன்றத்தினால் நிர்வகிக்கப்படும் ஆதிநடராசர் ஆலயத்தில் 12-06-2009 வெள்ளிக்கிழமை பேரவையின் திருக்கூட்டத்தினரால் காலை 8:30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை திருவாசகம் முற்றோதப்பட்டது. ஆலயகுருக்கள் நடராசப் பெருமானுக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் செய்து திருவாசகம் முற்றோதிய அடியார்களுக்கு பிரசாதம் வழங்கினார்.

பிரதி மாதம் தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் பேரவையின் திருக்கூட்டத்தினரால் திருவாசகம் முற்றோதுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**தெய்வத்தாய் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவு விழா**



அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு விழா 14-06-2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியில் இருந்து 8 மணி வரை கொண்டாடப் பட்டது. ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடத்தப்படடு நினைவுப் பேருரைகள் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. தலைவர் அவர்கள் தன் தலைமை யுரையில் அன்னை அவர்கள் தன் பேச்சாற்றலினாலும், எழுத்தாற்றலினாலும் சைவத் தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவைகள் செய்தவர். மேலும் தன் நிர்வாகத் திறமையினால் வீறுகொண்ட தெய்வமென கருதப்பட்ட துர்க்கை அம்மனை கருணையுள்ள தெய்வமாக தமிழ் மக்கள் யாவரையும் போற்றிப் பணியவைத்த உத்தமத் தாய் எனக் குறிப்பிட்டார். பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் பேசும்பொழுது தங்கம்மா அவர்கள் சைவத்தமிழ் உலகத்தில் வரலாற்று நாயகியாக இடம்பெற்றுள்ளார். அம்மா அவர்களின் பணி போற்றுதலுக்குரியது எனக் குறிப்பிட்டார். பேரவைய்யின் செயலாளர் சிவமுத்துலிங்கம் அவர்கள் தனது உரையில் திலகவதியார், மங்கயற்கரசியார், போன்றவர்களின் ஆத்மீக சாதனைகளை நாம் திருத்தொண்டர்புராணம் மூலமாக அறிகின்றோம். நாம் வாழும் காலத்தில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்தவர் அன்னை தங்கம்மா அவர்கள் எனக் குறிப்பிட்டார். பொருளாளர் செ. சோமசுந்தரம் அவர்கள் தனது உரையில் தேவஸ்தானத்தில் இருந்து களவு போன நகைகளை அம்பாளின் அருளுடன் மீட்டெடுத்தவர் அன்னை அவர்கள் எனக் குறிப்பிட்டார். பேரவை உறுப்பினர் சின்னராசா இராசமலர் அவர்கள் பேசும்பொழுது எமது சமுதாயத்தில் ஒரு பெண்மணி பலர் போற்ற உயர்ந்து நின்று பணியாற்றியமை பெண் இனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு என்று குறிப்பிட்டார்.

விசேட சிறப்புப் பூசை ஆராதனைகளுடன் விழா இனிது நிறைவேறியது.


**மாணிக்கவாசகர் குருபூசை**



மாணிக்கவாசகரின் குருபூசை திருவாசகம் முற்றோதிக் கொண்டாடப்பட்டது. காலை 8:30 மணிக்கு பேரவையின் குருபீட பிரார்த்தனையுடன் ஆரம்பமாகிய திருவாசகம் முற்றோதல் மாலை 4:30 மணிகது நிறைவெய்தியது. நண்பகல் காளி அம்பாள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முன்னைநாதர் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் சிறப்புப் பூசைகளும் நடைபெற்று அன்னதானமும் வழங்கப்பட்டது.

திருவாசகம் முற்றோதிப் பூர்த்தியடைந்த பின் திருவாசகத்தின் சிறப்புப் பற்றி பேரவைத்தலைவர் உரை நிகழ்த்தினார்.

**நடேசர் அபிசேகம் ஆனி உத்தரம்**




ஆனி உத்தரம் - நடேசர் அபிசேகத்தை முன்னிட்டு 29-06-2009 திங்கட்கிழமை திருவாசகம் முற்றோதப்பட்டு அபிசேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டது.




# கைதடியில் தரிசித்த மார்க்கண்டு சுவாமிகள்

**- சு. சிவதாஸ் -**

முன்னாள் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர்



1974, 1975 களில் அடியேனுக்கு 23 வயதளவில், கைதடி சிவதொண்டன் ஆச்சிரமத்தில் இடையறாத் தவமியற்றும் தேசிகனை தரிசிக்கும் வாய்ப்பை சரவணமுத்து ஐயா அவர்கள் எனக்கு வழங்கினார்கள். அரியாலையில் இருந்து சரவணமுத்து ஐயாவும் யானும் பேருந்து ஒன்று பிடித்து கைதடிச் சந்தியில் காலையிலே இறங்கிக் கொண்டோம். பெரியவர்களை தரிசனம் செய்யும்போது ஏதாவது கையுறை கொண்டு செல்வது வழக்கம் என்று சொல்லி, சந்தியில் இருந்த கடையொன்றில் வாழைப்பழச் சீப்பொன்று வாங்கிக் கொண்டு கண்டி வீதியால் சற்றுத் தெற்கே நடந்து சென்று இடப்புறம் செல்லும் தெருவழியே திரும்பிச் சென்ற பேராவலோடு ஆசிரமக் காணிக்குள் நுழைந்து கொண்டோம். காலைப்பொழுதிலே தோய்த்துலர்ந்த வெள்ளை வேட்டி சட்டைகள் அணிந்து திருநீற்றுக் குறியுடன் சுவாமிகளின் தரிசனமே ஒரு குறிக்கோளாய் பக்தியுடன் சென்று ஆச்சிரமக் கொட்டிலுக்குள்ளே புகுந்து கொண்டோம்.

நம்வரவைக் காத்திருப்பவர் போல் இருந்த சுவாமிகள் அரையிலே வெள்ளை வேட்டி மட்டும் தரித்தவராய் எம்மை நோக்கி வந்து பாய் ஒன்றை தரையிலே விரித்து எம்மை அமரும்படி வேண்டிக் கொண்டார். மௌனமாய் அமர்ந்திருந்த எம்மை நோக்கி குத்துவிளக்கு, கற்பூரம், விபூதி போன்ற பொருட்களைக் கொண்டு வந்து, தமது குருபரன் அருளிய வேதமாகிய நற்சிந்தனை எனும் ஏட்டை திறந்து அதில் உள்ள பாடல் ஒன்றைப் பாடிக் காட்டினார். எவர் சென்றாலும் ஏதும் பேசாமல், இப்படியே நற்சிந்தனைப் பாடல்களை எழுந்தமானமாக எடுத்துப் பாடுவதே அவர் அடியார்களுக்கு செய்யும் தொண்டாக இருந்தது. அந்தப் பாடலிலே வரும் போதனைகளையே தரிசிக்க செல்பவர்கள் தமக்குரிய நல்லுபதேசமாக எடுத்துக் கொள்வர். நரைத்த தலையும் நெடுத்த மேனியுமாய் இடையிடையே புன்முறுவலுமாய் அவர் காட்டும் கோலம் ஒரு தெய்வக் கோலமேயாம்.

தமது குருவாகிய சிவயோக சுவாமி தமக்கு ஆங்காங்கே அருளிய வாசகங்களை பதிந்து வைத்திருந்தார். இவ்வாசகங்கள் யோகர் சுவாமிகளின் அருள் மொழிகள் என்னும் நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்நூலில் யோகர் சுவாமிகளின் சீடர்களான செல்லத்துரை சுவாமிகள், சோல்பரி பிரபுவின் மகன் சாந்தசுவாமிகள், முன்னாள் அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா ஆகியோர் பதிந்து வைத்திருந்த வாசகங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

"பூரணஞானம் பெறும்வரை குருடனாகவும், செவிடனாகவும் ஊமையாகவும் இரு' மௌனம் என்பது மார்க்கண்டு சுவாமிகளுக்கு, சிவயோகசுவாமிகள் அருளிய வாசகத்தில் ஒன்று. இதனை யொட்டியே, மார்க்கண்டு சுவாமிகள் எப்பொழுதும் மௌனத்திலே இருந்தாரென்பர். குரு சுவாமியின் நற்சிந்தனையில் இருந்து எதனையும் எடுத்துச் சொல்வதைத் தவிர, வேறு ஒன்றையும் அவர் சொன்னதாக இல்லை. சிவத்தியானமே பிறவிப்பிணிக்கு மருந்தென குருபரன் எடுத்தியம்பும் வாசகத்திற்கேற்ப, இறைவனையே சதா எண்ணிக் கொண்டிருந்த மார்க்கண்டு சுவாமிகளின் உயர்ந்த முன்னேற்றம் கருதி சிவயோகர் ஒருமுறை பின்வருமாறு எடுத்தியம்பினார். "தியானம் செய்தால் அதுவும் வேலை' சும்மா பத்து நிமிடத்துக்கு இருக்கப் பழகு".

மேற்படி உபதேசத்தை நாம் எல்லோரும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஆரம்பத்திலே ஒருவன் தனது உபாசனா மூர்த்தியை மனக் கண்ணால் கண்டு மந்திர ஜபம் சொல்லிப் பக்தி பண்ணலாம்.

ஆனால் இது உண்மையான தியானமாகாது. மனக்கண்ணால் கண்டு வழிபடுதல் போன்ற நற்கருமாக்களினாலும் பிறருக்கு செய்யும் தொண்டினாலும் எமது பூர்வீக மற்றும் இப்பிறப்பு வாசனைகள் செயலிழக்கப்பட்டு, மனம் ஏகாந்தமாய் எண்ணம் எதுவும் இல்லாமல் இருக்கும் நிலையே தியானமாகும். அதனை சிவத்தியானம் எனச் சிவயோக சுவாமிகள் குறிப்பர். "சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே, இம் மாயா யோகம் இனி ஏனடா" என்று மார்க்கண்டு சுவாமிகளுக்கு குருபரன் எடுத்தியம்பினார்.

மார்க்கண்டு சுவாமி கைதடி ஆச்சிரமத்திற் குடிபுகுந்த இரண்டாவது ஆண்டில் நிகழ்ந்த மகாசிவராத்திரியன்று சாயங்காலப் பொழுதில், சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்காக பின்வரும் பாடலை அருளினார் என்று செல்லத்துரை சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

"எட்டாத கொப்புக்கு ஏணி வைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசைசெய்தேன் - தங்கமே
முன்னுமில்லை பின்னுமில்லை".

இவ்வாறாக அதில் பத்து பாடல்கள். 'அட்டாங்க யோகம் விட்டேன் ஆதாரம் ஆறும் விட்டேன்' என்றும் 'நீநானங்கு இல்லையடி என்றும் 'மூன்றுமொன்றாச்சுதடி' என்றும் ஆங்காங்கே அப்பாடல்களில் வரும் அடிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்குக் குருபரன் செய்த அத்வைத ஞான உபதேசமாகக் காணப்படுகின்றது. சிவயோகசுவாமிகளின் சீடர்களிலே மிக உன்னதமான இடத்திலிருந்து ஞானசுகங் கண்ட துறவியாக மார்க்கண்டு சுவாமிகள் காணப்படுகின்றார்.


இவ்வண்ணமான பெருந்தகையாரை யானும் சரவணமுத்து ஐயாவும் மனமார தரிசித்து விட்டு விடைபெறும்போது, நாம் காணிக்கையாக வழங்கிய வாழைப்பழச் சீப்பிலிருந்து ஆளுக்கு ஒரு பழமாகப் பிடுங்கித் தந்த பிரசாதத்தைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு மீளமுடியாமல் மீண்டு வந்து எங்கள் இல்லங்கள் சேர்ந்தோம்.


# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

# கள்ளுண்ணல்

(நாவலர் பெருமான்)

கள்ளு, அபின், கஞ்சா முதலியவை அறிவை மயக்கும் பொருள்கள். அவைகளை உண்பவர் அறிவையும் நல்லொழுக்கத்தையும் இழந்து தீயொழுக்கத்தையே அடைவர். கள்ளுண்பவர் தமக்குச் சினேகிதர் செய்த நன்மையையும் தாம் கற்ற நூற்பொருளையுஞ் சிந்தியார். தம்மைத் தொடர்ந்த பழிபாவங்களையும் அவைகளாலே தமக்கு விளைந்த துன்பத்தையும் அறியார். இவ்வியல்புடையவர் தம்முயிர்க்கு உறுதி செய்து கொள்வது எப்படி? கள்ளுண்பவருக்குக் களிப்பும் மயக்கமுமே இயற்கையாதலால், அவரிடத்துச் சண்டையும் கொலையும், களவும், பொய்யும், வியபிசாரமுமே குடிபுகும்.

கள்ளுண்டவருக்கு மன மொழி மெய்கள் தம் வசப்படாமையால் நாணம் அழியும். அழியவே, அறிவுடையோர் அவரைக் காணுதற்கும் அஞ்சித் தூரத்தே நீங்குவர். யாதுசெய்யினும் பொறுக்கும் மாதாவும் கள்ளுண்டு களித்தலைப் பொறுக்கமாட்டாள் அதன்பின் குற்றம் யாதும் பொறாத அறிவுடையோரெதிரே கள்ளுண்டு களித்தல் யாதாய் முடியும்? விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளினாலே அறிவு மயக்கத்தைக் கொள்ளுவோர் எவ்வளவு அறிவீனர். கள்ளுண்டவர் அநேகர் தஞ் செல்வமெல்லாம் இழந்து, வறியவராகித் தெருத்தோறும் அலைந்து திரிந்து, பின்னரும் பொருள் யாசித்துக் கள்ளுண்டு மயங்கி விழுந்து கிடந்து பலராலும் பழிக்கப்படுதலைக் கண்டுங் கள்ளுண்டல் எவ்வளவு அறியாமை!

கள்ளுண்டவரும், கள்ளுண்ணாதவரைக் கள்ளுண்பித்தவரும், கள் விற்றவரும், கள்ளுண்டவரோடு பழகினவரும் அளவில்லாத காலம் நரகத்திலே கிடந்து வருந்துவார்கள். இயம தூதர்கள் அவர்களுடைய நாக்கை வாளினாலே சேதித்து, உலோகங்கள் உருக்கிய நீரை அவர்கள் வாயிலே வார்ப்பார்கள் அவர்கள் நரகத்துன்பத்தை அனுபவித்த பின்பு பூமியிலே மலப் புழுவாய்ப் பிறந்து மலத்தை உண்டு இறந்து மனிதராய்ப் பிறந்து, சொத்தைப் பற்குத்து நோயினாலும், பைத்தியத்தினாலும், வயிற்று நோயினாலும் வருந்துவார்கள்.

அநேகர் வாம மதத்திலே புகுந்து பிறரையும் தம்வசப்படுத்திக் கெடுத்து, அவரோடு கள்ளுண்டு களிக்கின்றார்கள். வாம மதத்தை அனுட்டித்தவர்கள் பிசாச பதத்தை அடைவார்கள் என்பது உண்மை நூற்றுணிபு.

# திருமுறைகளின் தாற்பரியம்

**திரு. ச. அழகரத்தினம்**
(இளைப்பாறிய சுங்க இலாகா பிரதிப் பணிப்பாளர்)

சந்தேகம் 1: திருமுறை என்பதன் கருத்து யாது?

தெளிவு: திருமுறை என்பது தெய்வீக நூல் என்னும் கருத்துடையது. இது திருவருளாகிய சக்தி மேலிட அடியார்கள் வாக்கில் மலர்ந்த சிவபரம்பொருள் பற்றிய துதிகளாம். இவற்றை தமிழ் வேதம் என்றும் சமய நூலறிஞர்கள் கொள்வர். சிவபெருமானின் அளப்பருங் கருணை ஆன்மாக்களின் ஆணவ இருளை அகற்றுமாறு உதவும் வகை இத் திருமுறைகளால் உணரற்பாலதாம். திருமுறை இறைவனின் மந்திர ரூபமாகும். இவற்றைப் பரிசுத்தமான இதயத்தில் வைத்துப் பூசிக்க வேண்டும். இறைவனின் தரிசனங்கள் அற்புத லீலைகளை வழிமுறையாக ஆன்மீக விழிப்புணர்வு பெற்ற சீரடியார் உலகம் உய்யும்படியாகத் தமிழில் பாடியவையே பன்னிரு திருமுறைகளாம். (இறைவனின் இருப்புக்குப் பிரமாணமாய் இங்கு திருமுறைப் பாடல்கள் அமைவது தெளிவு)

**சந்தேகம் 2: திருமுறைகளை ஓதுவதால் ஏற்படும் பயன் யாது?**

தெளிவு : திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரப் பதிகங்களில் இறுதிக் காப்புத் தோத்திரங்களில் திருமுறைகளை முறைப்படி பாராயணம் பண்ணுவதால் பெறப்படும் பலாபலன்கள் விரிவாக தரப்பட்டுள்ளமை காண்க. திருமுறைகள் அனைத்தும் ஆன்மாக்களின் உய்தி பொருட்டு இறைவனால் அருளப்பட்ட திருவருட் பிரவாகமாகும். அதாவது இத்துதிகள் அனைத்தும் இருபத்தேழு சிவனடியார்களைச் சிவனே அதிட்டித்து அருளிச் செய்தனர் என்பது இவற்றை அருளிச்செய்த அடியார்களின் வாக்குகள் மூலம் அறியக்கிடக்கின்றது. இந்த அருட்பெருக்கில் மனதை லயப்படுத்தினால் சித்த சுத்தி ஏற்படும். இதன் பயனாக சித்தத்தாற் செலுத்தப்படுகின்ற மனத்தின் கண்ணுள்ள குறைகள் நீங்கி வேண்டற்பாலன. யாவும் வேண்டுவாங்கெய்தப் பெறலாம்.

மேலும் இத்தேவார திருவாசக தோத்திரங்களைப் பொருளுணர்ந்து சித்தங்களிகூர ஓதினால் ஆன்மசுத்தி ஏற்பட சிவதரிசனம் பெற்றுச் சிவபோகத்திற் திளைக்கலாம். ”சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி” விடும் பாங்கு திருமுறைப்

பாராயணத்திற்குண்டு.
(இறைவன் தன்திருவருட் சக்தியின் வழிநின்று எம்மை ஈடேற்றும் பான்மை இங்கு புலனாகும்)

## சந்தேகம் 3 : திருமுறைகளைப் பன்னிரண்டாக வகுத்தமைக்கு ஏதும் காரம் உண்முண்டா?

தெளிவு: உண்டுபோலும். மெய்கண்டார் அருளிச்செய்த சைவசித்தாந்த முதல்நூல், அதாவது சிவஞான போதம், பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. இவற்றை அடிப்படை இலக்கணமாகக் கொண்டு விளக்கமாக வேதாகம புராண இதிகாச சாரங்களை உள்ளடக்கிய இலக்கியப் படைப்பே இப் பன்னிரண்டு திருமுறைகளாம். இறைவன் அடியார்களின் ”உளமே புகுந்து மிகநல்ல வீணை தடவி” அருளிய பாடல்களே இவை. அனாகதபீடத்தில் மலர்கின்ற இதயத்தாமரையில் பன்னிரண்டு இதழ்கள் உண்டு என்கிறது சைவசித்தாந்தம்.

இத்திருமுறைகளையும் சிவனே இருபத்தேழு நட்சத்திரங்கள் போன்ற இருபத்தெழுவரை அதிட்டித்துப் பன்னிரண்டு இராசிகளுக்குச் சமானமாகப் பன்னிரண்டு பகுதிகளாக வகுத்து அருளியுள்ளார். இந்த இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றான ஆருத்திரா நட்சத்திரம் சிவனாரது நட்சத்திரமாகக் கொள்ளப்படுவது இங்கு நோக்கற்பாலது.

எங்களைச் சூழ்ந்து தாங்கும் வானவெளியில் உள்ள கோள்வீதியில் பன்னிரண்டு இராசிகள் உள்ளன. ஆங்கு இருபத்தேழு நட்சத்திரங்கள் ஒளிர்விட்டுப் பல்வேறு கிரணங்களை உலகுக்குச் சிவசக்தி போன்ற சூரிய சந்திரரின் வெப்பதட்பங்களுக்கு ஏற்றவாறு வழங்கிச் சீவராசிகள் உய்யுமாறு திகழ்கின்றன.

இது பிரபஞ்ச நியதி. பரமண்டலத்தின் நிழலாம் இகம் இருந்தவாறு நிஜமாகிய பரமண்டலத்தின் நிழலாம் இகம் இருந்தவாறு, நிஜமாகிய பரமண்டலத்தில் பரமபதியாகிய சிவனை ஆன்மாக்கள் சாருமாறு அவனது சங்கற்பமாம் திருவருள் உவந்தளித்த வேதாகம மார்க்கமும் சாதனங்களும், பெறுபேறுகளுமே பன்னிரண்டு திருமுறைகளில் இருபத்தேழு அடியார்களின் வாக்குகளில் பிர்த்தியட்சமாம்.

உதாரணமாகச் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் முக்கியமாக ”மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரனெனத் தொழுமே”, என்று இலக்கணம் வகுக்க, பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் சரித்திரங்களை அதற்கு இலக்கியமாக வகுத்திருந்தமை காண்க.

இவை எல்லாம் மனித முயற்சி என்று கொள்ளற்க. இது தெய்வ

நியதி - சைவநீதி.

(ஆன்மா சுய ஒளிபெறத் திருவருள் முனைப்பு இருந்தவாறு.)

**சந்தேகம் 4 : திருமுறைகளைப் பரவலாக நோக்கும் போது ஓரிடத்தில் சிவன் – ஆண்டான், சீவன் – அடிமை என்ற வலியுறுத்தல் காணப்பெற இன்னோரிடத்தில் சீவன் சிவனே என்று வலியுறுத்தப்பெறுகிறது. வேறொரு இடத்தில் சிவனே வானாகி, வளியாகி, தீயாகி, நீராகி, யாவையுமாய் அல்லையுமாய் நிற்கின்றான் என்ற பொருளில் பேசப்படுகிறது. இவற்றிற் காணும் பேதங்களுக்கு விளக்கம் என்ன?**

தெளிவு: இவை ஆன்ம பக்குவங்களின் பேதங்களையே குறிக்கின்றது. இதன் விளக்கத்தை மூன்று அவத்தைகளில் காணும் பேதாபேதங்களின், மூலம் உணர்வது சாலும்.

நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போது உலகம் எமக்கு வேறாகத் தெரிகிறது. இது போன்றது ஆன்மீகத்தின் துவைதநிலை. கடவுள் வேறு ஆன்மா வேறு எனக் காணும் நிலை ஆண்டான், அடிமை என்னும் துவைத நிலை.

கனவு காணும்போது நாம் காணும் உலகம் அந்நியமாக இல்லாமல் நம்மில் இருந்து உற்பவித்ததாய் இருக்கக் காண்கிறோம். இங்கு உலகம் வேறாகக் காண்பதுபோலத் தோன்றினாலும் நமக்குள்ளே இருந்து வருவதாக இருத்தல் உண்மை. நாம் வேறு உலகம் வேறு என்று கூறமுடியாத தன்மையில் கனவில் நாமே உலகமாகிக் காட்சியளிக்கின்றோம். இது போன்றது ஆன்மீகத்தில் விசிட்டாத்துவித நிலை. அதாவது இறைவன் வானாகி, வளியாகி அனைத்துமாய் தோற்றும் பாங்கு.

ஆழ்ந்த நித்திரையில் நமக்கு ஒன்றுமே தெரியாது. ஏன்? தெரிவதற்கு நமக்கு அந்நியமாய் வேறொன்றுமில்லை. உள்ளது இருப்பு ஒன்றே. அது சுகம் என்கிற திருவருள். நித்திரையில் நாம் இருந்தோம் என்பதற்குச் சான்றாக நாம் விழித்தவுடனே சுகமாகத் தூங்கினோம் என்று சொல்கிறோம் அல்லவா? நித்திரையிலிருந்து அறியாமை அகன்றால் இருப்பு சுகம் மாத்திரமே. இந்தச் சுகமே திருவருளாம். இதைவிட வேறொன்றுமில்லை.

இது சீவன் சிவனாம் தன்மையாகச் சொல்லப்படும் அத்துவித நிலையை விளக்கும் நிலை எனக் கொள்க.

ஆழ்நித்திரையில் இருக்கும் ஒரு பொருளே கனவில் பலவாய் விரிந்து விழிப்பில் வெவ்வேறு தனித்துவப் பொருள்களாகப் பரிணமிக்கின்றது.

விழிப்பில் ஈஸ்வரன், சீவன், உலகம் மூன்றும் இருக்கின்றன. கனவில் உலகம் சீவனில் ஒடுங்க சீவனும் ஈஸ்வரனுமே இருக்கின்றனர். ஆழ்நித்திரையில் சீவனும் ஈஸ்வரனுள் ஒடுங்க ஈஸ்வரன் மாத்திரமே உள்பொருள் ஒன்றாய் இருக்கிறது. ஒடுக்கத்திலிருந்து சீவேஸ்வரசகங்களாக பிரபஞ்ச விருத்திகள் ஆக்கம் நிலைபேறு பெறுகின்றன. இது வேதாந்தசாரம். வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் என்பர் பெரியோர்.



(ஆன்மா சார்ந்ததன் வண்ணமாம் இயங்கும் பான்மை ஈண்டு பெறப்படும்.)

(தொடரும்)


# FASHION FLORIST INC.

## பாஷன் பூக்களஞ்சியம்

### பாபுவின் கைவண்ணத்தில்
### பூக்கள் மாலையாகின்றன



**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

# கிராமம்

**சென்ற இதழ் தொடர்ச்சி:**

## விசாலாட்சி அம்மையார் (மாதாஜி) வரலாறு

### 1972 – 1990 கிளிநொச்சிக் குருகுலம்

ஒரு கட்டத்தில் அரசாங்கம் மலையகப் பாடசாலைகளைப் பொறுப்பேற்றது. அப்போது விசாலிக்கு 44 வயது. இக்கட்டான நிலை. இந்த நேரத்தில் கிளிநொச்சிக் குருகுலம் விசாலிக்கு ஆதரவு கொடுத்தது. புலவர் படிக்கின்ற காலத்திலேயே அவருடைய காணி விலையாகிவிட்டது. இருந்த வீட்டைச் சகோதரி தனதாக்கி விட்டார். அனாதைப் பெண்பிள்ளைகளின் மேற்பார்வையாளராகக் குருகுலத்தில் தங்கினார். இக்காலத்தில் விசேட தீட்சை, அதாவது சிவபூசை செய்யும் சிவதீட்சை பெற்றார். விடுதி இல்லத்தில் தொண்டு செய்து கொண்டு வன்னிமாவட்டப் பாடசாலைகளில் பிரசங்கம் செய்வார். அக்காலத்தில் வன்னிமாவட்டப் பாடசாலைகளில் பயின்ற மாணவர் தமிழில் க்ட்டுரை எழுதுவதில் சிரமப்பட்டமையால், மாணவர் மாதிரிக்கட்டுரைகள் 5-11ஆம் வகுப்பு வரைக்கும் பயன்பட எழுதினார். இக்காலத்தில் இவருக்கு விசேட சிறப்பு ஆசிரியையாக அயலிலுள்ள இந்து மகாவித்தியாலயத்தில் கல்வி படிப்பிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. இவர் இந்தியாவில் புலவர் படிக்கும்போது நன்னூல், காண்டிகை விருத்தி தொல்காப்பியம், இராமாயணம் பாரதம் போன்ற இதிகாசங்கள் சங்கநூல்களான அகநானூறு புறநானூறு குறுந்தொகை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் போன்ற பல நூல்கள் படித்த பயிற்சிப் பழக்கம் இருந்தமையால் படிப்பித்தல் மிகவும் இலகுவாக இருந்தது. அனாதை மாணவருக்கும் வசதிகுறைந்த மாணவ குடும்பங்களுக்கும் தன்னாலான உதவிகள் செய்தார்.

படிப்பித்த கல்லூரியில் இந்து மாமன்றத் தலைவியாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் மட்டக்களப்பு திருமலை போன்ற மாவட்டங்களில் சமயப் பேருரை செய்யச் செல்வார். 1986இல் இனக்கலவரம் கிளிநொச்சியில் ஏற்பட்டபோது மயிரிழையில் உயிர் தப்பினார். 1987இல் யாழ்மாவட்டத்தில் சிறிது காலம் கல்விக் கடமை ஆற்றிய பின் அகதியாகத் 1990இல் கொழும்பு சென்றார்.

1990-2003 வரை கொழும்பில்

இக்காலம் பொன்னான காலமெனக் நினைக்கலாம். தனது சகோதரியின் மகள் நந்தினி என்பவருடனும், சகோதரியின் இரு பேரப்பிள்ளைகளுடனும் கொழும்பில் அகதி வாழ்வில் விரக்தி ஏற்படாதிருக்க அங்குள்ள ஆலயங்கட்குச் சென்று வழிபாடு

செய்கின்ற காலத்தில் பல நூல்களும் எழுதி வெளியிட்டார். பல பெரியார்களின் தொடர்புகளும் ஏற்பட்டன. விவேகானந்த சபையிலும் கொச்சிக்கடை பொன்னம்பல வாணேஸ்வர ஆலயத்திலும் பேலியக்கொடை பூபால விநாயகர் ஆலயத்திலும் திருமுறை முற்றோதலில் பங்கு பற்றினார். கொழும்பிலுள்ள பல ஆலயங்களில் புராணபடனமும் செய்கின்ற வாய்ப்பும் கிடைத்தது. அக்காலத்தில் இவர் எழுதிய நூல்களை உலக சைவப்பேரவை, கொழும்பு பேலியகொடை பூபால விநாயகர் ஆலயம், அகில இலங்கை இந்துசமய கலாச்சார அமைச்சு வெளியீடு அறிமுக விழாச் செய்தன, இவர் எழுதிய திருவாதவூரடிகள் புராணபடனம் என்ற நூலுக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கம் அறிமுக விழாச் செய்து சைவப்பெரியார் கதிரவேற்பிள்ளை எழுதிய திருவாதவூரடிகள் புராண படனம் முதற் திறமை எனில் இ∴து இரண்டாவது திறமையாகும் எனப் பாராட்டியது. இவ்வாறான பல நூல்கள் 40க்கு மேற்பட்டவை எழுதி வெளியிடப் பொருளுதவிகள் செய்தவர்கள் சகோதரியின் பிள்ளைகளும், இவருடைய அருமைத் தம்பியார் சிவதொண்டன் திரு. நவரத்தினமுமாவர். இந்த நூல்களை எழுதி வெளியிட்டமையால் இவருக்குக் கிட்டத்தட்ட மூன்று லட்சம் கைநட்டமாக இருப்பினும் ஞானப்பணியெனப் பெருமிதம் அடைகிறார். இவருக்குப் பல விருதுகளும் பட்டங்களும் சுவாமி கிருபானந்தவாரியாராலும் உலக சைவப் பேரவை, அகில இலங்கை இந்து சமய அமைச்சுப் பெரியார்களாலும் வழங்கப்பட்டன.

கொழும்பில் இருந்த போது பல முறை இந்திய தல யாத்திரை செய்தார். முக்கியமாக வடஇந்திய தென்னிந்திய யாத்திரையில் ரிஷிகேசம் முதல் கன்னியாகுமரிவரை சென்றுள்ளார். உலக சைவப் பேரவையில் இவர் போஷகராகவும் இருந்தார். அக்காலத்தில் லண்டனில் உலகச் சைவப் பேரவையில் இருந்த சிவநந்தி அடிகள் கொழும்பு வந்து கூட்டம் நடத்தியபோது இவரின் பேச்சின், திறமை கண்டு, கனடாவில் நடக்கும் உலக சைவப் பேரவை மாநாட்டுக்குக் கட்டுரை வாசிக்க அழைத்தார். கனடா சைவப்பேரவை காரியதரிசியைச் செய்யும்படி கூறினார். அவ்வாறே கொழும்பு உலக சைவப்பேரவை செயலாளர் திரு. தயாபரன் அவர்கட்கும் கூறினார். ஆயினும் கனடா செல்லும் வாய்ப்புக் கைகூடவில்லை.

1997இல் இந்திய தல யாத்திரையின்போது திரு ஈங்கோய்மலை ஸ்ரீ லலிதாசமாசம் சென்றார். அங்கு சில நாள் தங்கி வித்தியா மந்திரம் சந்நியாசம் பெற்றார். தமது வாழ்வை

இறை வாழ்விற்கென அர்ப்பணித்த அம்மையார் தமது வாழ்க்கையின் பெரும் ஞானப் பொக்கிஷமாகவும் ஞானக் களஞ்சியமாகவும் பிரவேச தீட்சை ஏழு வயதில் பெற்றபின் மந்திர தீட்சை, விசேட தீட்சை (சிவபூசை செய்யும்தகுதித் தீட்சை) வித்தியா மந்திரத்தீட்சை, சந்நியாச தீட்சை பெற்றமை குறிப்பிடத்தக்கதே.

இவரின் பெரிய குறை. அது நிறைவேறாத ஏக்கம். அதனால் மனவருத்தம் இவருக்குண்டு. இந்தியாவில் ஆகம விதிப்படி நடக்கும் பெண்கள் சந்நியாசம் ஆச்சிரமம் கன்னியாகுமரி முதல் இமயமலைவரை ஆயிரக்கணக்கிலுண்டு. அது அங்கு சமயவாதிகள் கல்விமான்கள் நிறைந்தமையால் தர்மம் தழைப்பதால் ஓரளவு மக்கள் அமைதி காண்கின்றனர். இலங்கையில் தமிழரிடையே பெண்களுக்கு ஆகமவிதிப்படி நடக்கின்ற ஆச்சிரமம் எங்கேயும் இல்லை. பலமுறை இவர் முயற்சி செய்தார். பொருள் இடம் ஏவல் மூன்று ஒருவரிடம் இல்லையென்றால் எதுவும் செய்ய முடியாதுதானே. கொழுகொம்பில்லாத கொடிபோலத் தனிமரமாக, துர்க்கா துரந்தரியின் அனுசரணையுடன் அவவின் விடுதியில் அகதியாக இருந்து தவம் செய்த பயனோ என்னவோ குப்பிழான் சொக்கவளவுச் சோதி விநாயகப் பெருமானின் அன்னதானமடத்தில் இரு அறைகள் கிடைக்கப் போகின்றன.


# S & S Engravers

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைகேற்ப**

**குறைந்த விலையில்**



Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels,

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**

# தாவரங்கள் விலங்குகளுக்கும் கர்மா உண்டா?

**வைத்திய கலாநிதி இ. இலம்போதரன்**

உயிரினங்களை வரையறுத்தலை 2400 ஆண்டுகளுக்கு முன்னர் நறுக்காக ஒரு சில வரிகளில் செய்து முடித்திருக்கிறார் தொல்காப்பியர். இது மட்டுமல்ல இன்றும் விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும் சமய வாதிகளும் வரையறுப்பதற்குத் திண்டாடும் மனிதத்தையும் மிகத்தெளிவாக இரண்டு வரிகளில் வரையறுத்துக்காட்டுகின்றார்.

ஆறு என்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைக் (Sence of Discrimination) குறிக்கும். நல்லது கெட்டது ஆராய்ந்து செய்யும் அறிவு பகுத்தறிவு. இது மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பு. மற்றைய சீவ ராசிகளுக்குப் பகுத்தறிவு - அதாவது நல்லது கெட்டது ஆய்ந்து செயற்படும் அறிவு இல்லை.

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே புல்லும் மரமும் ஓரறிவினவே, என்கின்றது தொல்காப்பியம். தொட்டுணர்வு மட்டும் உள்ளது தாவரங்கள். அதனால் தான் தொட்டாற் சினுங்கி இலை நாம் தொட்டதும் சுருங்குகின்றது.

இரண்டு அறிவு அதுவே அதனொடு நாவே நந்தும் முரளும் ஈரறிவினவே. தொட்டுணர்வோடு நாவின் சுவையுணர்வும் கூடியதாக ஈரறிவு உள்ள பிராணிகள் நத்தை, மீன் போன்றவை.

மூன்று அறிவு அதுவே அவற்றொடு மூக்கே சிதலும் எறும்பும் மூவறிவினவே. மேற்சொன்ன இரு அறிவுகளோடு மூக்கின் மணநுகர்ச்சியும் கூடியதாக உள்ளவை ஈசல், எறும்பு போன்ற பிராணிகள். இவை மூவறிவு உள்ளவை.

நான்கு அறிவு அதுவே அவற்றொடு கண்ணே நண்டும் தும்பியும் நான்கறிவினவே. இவற்றோடு கண் பார்வையும் விருத்தியடைந்துள்ள நண்டு, தும்பி போன்றவை நான்கறிவுள்ளன.

ஐந்து அறிவு அதுவே அவற்றொடு செவியே மாவும் புள்ளும் ஐயறிவினவே. மேற் சொன்ன நான்கு அறிவுகளோடு செவியின் மூலமான ஒலியுணர்வும் சேர ஐந்தறிவாகின்றது. மிருகங்கள்,

பறவைகள் என்பன ஐந்தறிவுள்ளவையாகும்.

ஆறறிவு அதுவே அவற்றொடு மனனே மக்கள் தாமே ஆறறிவினவே. இவற்றோடு மனத்தின் செயற்பாட்டின் மூலமான பகுத்தறிவும் சேர ஆறறிவு ஆகின்றனது. இது மக்களுக்கு மட்டும் உரிய சிறப்பு (speciality) ஆகும். மன் சென்ற வட மொழிச் சொல், மனிதன் என்ற தமிழ்ச்சொல், Man என்ற ஆங்கிலச் சொல் யாவும் மன் என்ற ஒரே அடி சொற்கள்.

இது மனிதன் ஒரு சிறப்பு விலங்கு என்ற இன்றைய விஞ்ஞானக் கருத்துடனும், மனிதன் ஒரு சிறப்புப் படைப்பு என்ற சமயவாதிகளின் கருத்துடனும், மனிதன் என்பது வெறும் எண்ணக்குவியல்களின் நிகழ்தகவே என்ற தத்துவஞானிகளின் கருத்துடனும் மிக எளிமையாக, எந்தவித முரண்பாடோ, சிக்கலோ இல்லாமல் ஒத்துப்போகிறது. இவற்றில் மனிதப் பிறவிக்குத்தான் ஆறாவது அறிவாகிய பகுத்த்றிவு உண்டு நல்லது கெட்டது பகுத்து ஆராயும் திறன் உண்டு. அவற்றில் ஒன்றைத்தேர்ந்து செய்யும் சுதந்திரம் உண்டு. ஆகவே நாம் கூறும் பாவ புண்ணியங்களும், கர்ம வினைகளும், இவற்றின் பலன்களும் மனிதப்பிறவிக்கு மட்டும்தான் உரியனவாக வேண்டும் என்ற கருத்து எழுகின்றது.

"நாம் இந்த மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம் மனம் மொழி மெய்களால் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்று யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறுகிறார். அப்பர் சுவாமிகள் "மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று பாடியது கவனிக்கத்தக்கது.

"புவனியில் போய்ப் பிறவாமையினால் நாம் போக்குகின்றோம் அவமே" என்று மாணிக்கவாசகர் பாடினார்.

ஆக மனிதப்பிறவியின் நோக்கம் இறைவனை அடைதலே. ஆனால் ஏனைய பிறவிகள் அவற்றுக்கு கொடுக்கப்பட்ட உடல், கருவிகள், உலகம், அனுபவங்கள் வாயிலாகப் பக்குவ முதிர்ச்சி பெற்று பின்னர் மேலான மனிதப்பிறவியில் பிறந்து இறையை அடைதல் வேண்டும். ஆனாலும் இதற்கு விதி விலக்குகளும் உள்ளன. ஈ இறைவனை வழிபட்டு நற்கதி அடைந்த தலம் ஈங்கோய் மலை. யானையும் சிலந்தியும் வழிபட்டு நற்கதி அடைந்த தலம் திருவானைக்கா.

திருவிளையாடற் புராணத்தின் நாரைக்கு உபதேசித்த படலமும் கரிக்குருவிக்கு முத்தி கொடுத்த படலமும் பன்றிக்குட்டிகளுக்கு பால் கொடுத்த படலமும் விலங்குகள் பறவைகள்கூட இறையை அடைவதற்கும் புண்ணிய பாவ காரியங்களுக்கும் விதி விலக்கல்ல என்று நமக்கு கூறுகின்றன.

இவ்வாறான இறை வழிபாடும், அதன் பயனான சிவ கதியுமே மனிதப்பிறவியின் நோக்கம். இவை வெறும் வாய்ப்பு அல்ல. ஆனால் மிருகங்கள் பறவைகளுக்கு இறையின்பம் நோக்கமல்ல. ஆனால் ஒரு வாய்ப்பு. ஒரு மரமாகப் பிறந்தால் ஒரு இடத்திலேயே தரித்திருந்து, வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, பனியில் வாடி, காற்றில் உலைந்து தனது கர்மாவைக் கழிக்கின்றது. மரங்களுக்கு ஊறு என்ற தொடுகை உணர்ச்சி இருப்பதாக முன்னர் கூறிய தொல்காப்பியச் சூத்திரம் கூறுவதை இங்கு பிரயோகிக்க வேண்டும். அதே சமயம் மரமானது தன்னை நாடி வரும் உயிரினங்களுக்கு நிழலைத் தந்து, உறைவிடம் தந்து, காற்றைத் தந்து, வாயு மண்டலத்தைச் சுத்தமாக்கி, பூவைத் தந்து, காயைத் தந்து, கனியைத் தந்து, விறகைத் தந்து, உணவைத் தந்து, தனது உடலையும் கூட மரமாகத் தந்து உதவி எவ்வளவோ நல் வினைகளையும் செய்கின்றது. இதிலும் சில மரங்கள் பூசைத் திரவியங்களான பூ, பழம், கனி, மற்றும் இலைகளைத் தந்தும், சில வேளைகளில் கோயிலில் நிழல் மரமாக இருந்தும், தல விருட்சமாக இருந்தும், மேலான சிவ புண்ணியங்களைச் செய்யும் பேற்றையும் பெறுகின்றன. இவற்றுக்கு இதனால் வருகின்ற நல்வினைப் பயனும், சிவ புண்ணியப் பலனும் அவற்றை மேலான இறைநிலைக்கு நேரடியாகவே உயர்த்தவும் வல்லன. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கொற்றவன் குடி உமாபதி சிவம் அவர்கள் தினமும் அபிசேக நீர் போய் புனிதமடைந்து பக்குவம் பெற்றிருந்த முள்ளிச்செடிக்கு எல்லோரும் காண முத்தி கொடுத்து ஒளியுடலுடன் அனுப்பியது இங்கு நோக்கத்தக்கது.

அர்ச்சனைக்கு உபயோகங்கள் ஆகிய தருக்கள்ஆதி
கற்புஉறு சிவலோகத்தைக் கலப்பதே திண்ணம் கண்டோர்
அற்புதன் பூசைதன்னை அருவினை அறுவர்அன்பால்
தற்பரன் பூசை கண்டோர் சிவபுரம் அதனைச் சார்வார்
-சிவ தருமோத்தர ஆகமம் பாடல் 43

சிவ பூசைக்குப் பயன்படும் பொருள்கள், மலர்கள் தரும் செடிகள்,

இலை தரும் வில்வ மரம் போன்றனவும் சிவலோகப்பேறு பெறும். அடியவர்கள் சிவபூசை செய்யும் முறைகளையும் நேரில் பார்ப்பவர்களுக்கும் வினை நீக்கம் நிகழும். அவற்றை அன்போடு தரிசிப்பவரும் சிவபுரத்தைச் சேர்வர்.

மைந்தர் மாதரும் மற்றை அலியுமோ
பந்தம்பாச விலங்கும் பறவையும்
முந்த ஆக்கைஇது எனமுன்உறும்
அந்தஆக்கை அடைந்துஅகன்று ஆழும்ஏ.

-சிவ தருமோத்தர ஆகமம் பாடல்

ஆடவர், மகளிர், இவையிரண்டும் இல்லாத அலிகள் ஆகிய மூவகை மனிதர்களும் தமது பாவச்செயல்களுக்கு ஏற்ற நரகத்துன்பங்களை அனுபவிப்பதுபோல, பறவைகளும் விலங்குகளும்கூட அவை செய்த தீய செயல்களுக்குத் தக்கபடி இறக்கும் போது தமது உடலை விட்டு நீங்கி நரக அனுபவம் பெறுவதற்கு உரிய உடல்களைப்பெற்று அத்துன்பங்களை அனுபவிக்கும். (ஆக்கை- உடம்பு)

விண்ணுளார் நரர் மற்றை விலங்குமே
பணணு பாவ பலத்தைக் கொடுப்பவன்
திண்ணமே யமன் தேசிகன் தீர்த்திடும்
பண்ணில் பாவ விதம் சிவ பத்தரும்

-சிவ தருமோத்தர ஆகமம் பாடல்

தேவர்களும், மனிதர்களும், விலங்குகளும் செய்த தீய செயல்களுக்கு ஏற்ற பலன்களை இயமன் அளிப்பான். இவ்வாறே சிவனடியார்கள் செய்த தீவினைகளால் உண்டான பாவங்களை ஞானகுரு நீக்குவார்.

நரர் - மனிதர், தேசிகன்- ஞானகுரு. சிவ தருமோத்தரம் என்பது சைவத்தின் அடிப்படை நூல்களாகிய சிவாகமங்கள் இருபத்தெட்டில் ஒன்றாகிய சர்வோக்த ஆகமத்தின் பதினொரு உப ஆகமங்களில் ஒன்று. இதை தமிழில் பாடியவர் 16ம் நூற்றாடின் நடுப்பகுதியில் வாழ்ந்த மறைஞான சம்பந்த தேசிகர். இவர் செய்த பிற நூல்களுள் சைவ சமய நெறி, பதி பசு பாசப் பனுவல், உருத்திராக்க விசிட்டம் என்பன குறிப்பிடத்தக்கன. இவையன்றி சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கில் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணம் இவர் செய்தது என்று கூறுவோரும் உளர்.

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. இந்த உலகம் இயங்கிக் கொண்டிருப்பது தான் நமக்குத் தெரிகின்றது. ஆனால் அதை இயக்குபவனை நம்மால் பார்க்க முடிவதில்லை.

2. தியானம் பிரார்த்தனை போன்றவற்றின் மூலம் இறைவனை ஊடுருவினால் உணர்வின் மூலமும் அகக்காட்சிகள் மூலமும் இறைவனின் மகிமைகளை காண முடியும்.

3. வேரில்லாவிட்டால் எப்படி மரமில்லையோ அவ்வாறே இறைவன் இல்லாவிட்டால் இவ்வுலகமில்லை.

4. நாம் எந்த அளவிற்குத் தெய்வத்தை நம்புகின்றோமோ தெய்வம் அந்த அளவிற்கு நம்மை காப்பாற்றுகின்றது.

5. நல்லறிவு பெற்ற மக்களே நல்லவர்களாக விளங்குவார்கள். நல்லவர்கள் வாழும் நாடே நல்ல நாடாக விளங்கும்.

6. இன்றைய மாணவச் செல்வங்களே வருங்கால உலகம்.

7. ஈழத்தில் சாதுக்கள் பரம்பரை ஒன்று இருந்து வந்துள்ளது. அவர்களில் பலருடைய வாழ்க்கை வரலாறுகள் கேள்வி ஞானத்தோடு மாத்திரம் இருக்கிறது. இதனை ஆய்வு செய்தமையினால் தான் அடியேனுக்கு ஈழத்து சித்தர்கள் என்ற நூலை எழுதும் எண்ணம் உதித்தது.

8. எமது ஆத்மீகச் செல்வங்கள் எத்தனையோ எமது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டது.

9. எமதுமக்களின் அறியாமையினாலும், சோம்பலினாலும் நாம் கேள்விப்படாத பல எமது போக்கிசங்கள் எம்மை விட்டு மறைந்து விட்டன.

10. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எனது ஆத்மீக சேவைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாகவும் காவலராகவும் இருந்து

வழிநடத்தியவர் இல்லறஞானி திரு. க. இராமச்சந்திரா அவர்கள் ஆவார்.

11. தன் வாழ்நாள் முழுவதும் பொருளையும் புகழையும், பதவியையும் விரும்பாது வெளியில் தம்மைக் காட்டிக் கொள்ளாது அடக்கமாக இருந்து ஆத்மீக சேவை புரிந்தவர் பெரியார் இராமச்சந்திரா அவர்கள்.

12. இன்றைய மனிதன் புறவாழ்வைப் பற்றி மாத்திரமே சிந்திப்பதனால் தான் உலகில் இத்தனை இன்னல்களும் தோன்றியுள்ளன.

13. மனிதன் என்று அகவாழ்வை சிந்திக்க மறந்தானோ அன்றே அவன் மிருகவாழ்க்கையின் நிலைக்கு இறங்கி விட்டான்.

14. சமயவாழ்க்கையின்றி மனிதன் மனித வாழ்க்கை வாழ முடியுமென்று கனவு காணுகின்றான். அதன் பலன் இன்றைய மனிதனுடைய மிருக வாழ்க்கையாகும்.

15. சமயத்தை இழந்து நமது சமூகம் வாழ முற்படுதல் உயிரை இழந்த பின் உடல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலாகும். பட்ட மரத்துக்குத் தண்ணீர் ஊற்றித் தழைக்க வைப்பது போலாகும்.

16. அநுபூதி பெற வேண்டுமானால் மகான்களை நாடிச் செல்ல வேண்டும்.

17. அனுபூதி பெற்றவர் ஒருவரால்தான் பெறவிரும்பும் ஒருவருக்கு அனுபூதியை அளிக்க முடியும்.

18. பரமனை அனுபூதியில் அடையப்பெற்றவர்கள் பகர்ந்துள்ள பதங்கள் ஆப்த வாக்கியங்கள் எனப்படுகின்றன. அந்த ஆப்த வாக்கியங்களின் உட்கருத்து அறிந்து கொள்ளப்படுமளவு கடவுள் தத்துவமே அறிந்து கொள்ளப்படுகின்றது.

19. இறைவனுடைய அருளும் சாதகனுடைய முயற்சியும் ஒன்று கூடுவதே சிவராஜயோகம் எனப்படுகின்றது.

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA


## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா

**OFFERED TO THE PUBLIC BY**
**CHILDREN'S EDUCATION FUNDS INC.**
**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற
தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

**Bus: 416 -438 -0660 / 416-438-3578**
**Res: 905 -472-1139 Call: 416-899-6044**
**FAX: 416 -438 -8532**

2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7

# APPLEMORE

## AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

**Ontario Emission Inspection**



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்


**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

ISSN 1703-9185


# முருகன் புத்தகசாலை

இரு இடங்களில் உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH,
ONTARIO, M1P 2X8, CANADA.**

**TEL : (416) 285-9118**

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit 109
Tel: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**

**TEL: 416-807-7468
416-410-6401**